# பிரஜாநுகூலன்.

அநுபவ ஞானங்க ளடங்கிய மாதப்பத்திரிகை.

வருஷ சந்தா ரூபா 2.] Copy Right. [வெளிநாடு ரூ. 2—8—0.

| வருஷம் 14. | திரிச்சிராப்பள்ளி:<br>டிசம்பர் மீ —1917. | மாதம் 2. |
|---|---|---|

THE REGISTRAR ... OFFICE 18 DEC 1917 MADRAS

## மனன மாலை

82. "தெய்வம் தொழு" என்ற வாக்கியத்தை மறவாமல் ஒவ்வொரு நாளும் ஈசுவரனைத் தியானித்து வந்தால் ஸர்வ பிரசாதங்களையும் அதி சுலபமாய் அடையலாம். பக்தி செய்வதில் ஒருவித ஆனந்தம் உண்டாகிறது. தினம்தோறும் பகவானை ஆராதிப்பவன் ஒரு நாள் ஆராதிக்க முடியாமற்போனால் பெரிய துன்பம் நேர்ந்ததாக எண்ணி வருத்தமடைகிறான். நற்காரியங்களைச் செய்வதால் திருப்தியும், துஷ்கிருத்தியங்களைப் புரிவதால் அதிருப்தியும் உண்டாவது ஸகஜம். ஸகல நற்காரியங்களிலும் மேலானது தெய்வத்தியானமாதலின் நாம் ஸதா கடவுளைத் தொழுதுகொண்டிருக்கக் கடவோம்.

83. "கள் துர்நாற்றம்" வீசுகிறதென்று தெரிந்தும் மூடர்கள் அதை அருந்துகின்றனர். சாராயம் கசப்பாயினும் அதை உட்கொள்வோர் பலர். திருடினால் தண்டனை கிடைக்குமென்று தெரிந்தும், திருடன் தன்னுடைய தீத்தொழிலைச் செய்துகொண்டிருக்கிறான். ஸர்வ வஸ்துக்களும் நிறைந்துள்ள பொருட்காட்சிசாலையில் புத்திமானுடைய திருஷ்டி பண்டங்களின் அமைப்பிலும் அழகிலும் பாய்கின்றது. திருடனுடைய கண்கள் அப்பொருள்களை அபகரிப்பதிலேயே நாட்டம் கொள்ளுகின்றன. இப்படியே அவரவர்கள் முன்செய்த வினைக்கேற்ப இந்த ஜென்மத்தில் நல்ல காரியமும் கெட்ட காரியமும் செய்து கியாதி அல்லது அபக்கியாதியை யடைகிறார்கள். இதைத் தடுக்க யாரால் ஸாத்யமாகும்?

84. "வாழ்நாள்" சொற்பம். வருஷங்கள் பறந்து போகின்றன. கதை தொடங்கி முடிவது போல் நமது வாழ்க்கை ஆரம்பித்து அதிசீக்கிரத்தில் முடிகிறது. இந்த சொற்பகாலத்தில் முக்தியை யடைய வேண்டி ஞான மார்க்கத்தை அனுஸரியாமல் காமிய கர்மங்களையே செய்து கொண்டிருப்பது எத்தனை மதியீனம்? காலம் தான் நமக்கு சொந்தமான வயல். அதில் நாம் பயிரிட்டிருக்கும் பலன் கடவுளுக்கு உகந்ததா யிருக்கவேண்டும். நம்முடைய காலநிலத்தில் விளையும் பலன்களை யெல்லாம் முக்தியை யடைய வேண்டியே உபயோகிக்கக்கடவோம். இதுவன்றோ நாம் அடிக்கவேண்டிய கொள்ளை.

85. "துன்பம்" நேர்ந்ததே யென்று கவலைப்படலாகாது. துன்ப முண்டாயிற்றே யென்று சந்தோஷப்படவேண்டும். ஏனெனில் அநேக இன்பங்களாகிற முளைகள் துன்பத்திலிருந்து தான் விளைகின்றன. எதைப் போலெனில், மழை பெய்த பிறகு புஷ்பங்கள் உண்டாகி நறுமணம் வீசுவது போலாம். ஆகாசத்தில் மேகங்கள் இருண்டு கவிழ்ந்து வருஷித்த பின் எப்படி சூரிய வெளிச்ச முண்டாகிறதோ, அப்படியே பகவத் கிருபையால் அக்ஞானமாகிய இருள் நீங்கி ஞானமாகிய வெளிச்ச முண்டாகும். ஆதலின் எக்காலத்திலும் ஈசுவரபஜனை செய்து மனோசாந்தியோடிரு என்பது கருத்து.

86. "சுத்த வெள்ளியினால்" செய்த பாத்திரத்தை அடிக்கடி துலக்கவேண்டிய அவசியமில்லை. ஜெர்மன் வெள்ளிப் பாத்திரங்களை அடிக்கடி துலக்கவேண்டும். இல்லையேல் அது பித்தளை யென்று பிறருக்குத் தெரிந்துவிடும். இதைப்போல் உண்மையான ஆநந்தத்தை யநுபவிப்பது சிலாக்கியமே யன்றி, இவ்வுலக சுகமாகிய போலி இன்பத்தை நுகர்வது சிலாக்ய மல்ல. வேஷதாரிக்கிருக்கும் கவலை யாருக்குண்டு? எங்கே தன்னுடைய வேஷம் தெரிந்துவிடுமோ வென்ற விசாரம் அவன் மனதிற் குடிகொண்டிருக்கும். அவனது அந்தியகாலம் பிரலாபிப்புடனும் நரகவாதனையுடனும் முடிவு பெறும்.

## தீபாவளியின் விநோதங்கள்.

வந்தாலும் வந்தது தீபாவளி! பணக்காரர்களுடைய பணம் பாணமாவதும், பையன்களுடைய பணமெல்லாம் பட்டாசு மத்தாப்புக் கட்டுகளுக்குப் போவதும், சாராயமெல்லாம் பூராவாக விலையாவதும்—இவ்வாறாகக் கையிலுள்ள பணத்தை யெல்லாம் ஓட்டாஞ்சல்லியாக நினைத்துச் செலவிடுவதனால் தான், அர்பத்னெட் கம்பெனி திடீரென்று நின்ற நிலையிலிருந்து கீழே விழுந்து சிதறிய போது—அப்படிப்பட்ட சங்கதிகளுக்கு—"அது தீபாவளி எடுத்துக்கொண்டது" என்பதாகக் கூறும் வாசகமும் வழக்கத்தில் வந்து விட்டது.

"ஆய்ப்போன கல்யாணம் போய்ப் பார்த்தால் தெரியும்" என்பதாக, தீபாவளி கழிந்த பிறகு ஒவ்வொரு வீட்டினுள்ளும் சென்று பார்ப்பின், அந்தந்த வீடு கொஞ்ச 'நஞ்சம்' கடன் பட்டிருப்பதும், வீட்டிலிருந்த—பெட்டியிலிருந்த—பாவையரின் கழுத்திலிருந்த—நகை யுடைமைகள் பாங்கி ஆபீஸிலும், வட்டித் தரகு நடத்தும் மாதர்கள் வீட்டிலும் அடகுக்குப் போயிருப்பதும், அவ்

வளவு ரூபாய்களும் எப்படித்தான் செலவாயிற்ரே என்று வீட்டுக்காரன் கையைக் கடித்துக் கொள்வதும், உத்தேசத்துக்கு மேல் செலவாகி விட்டதுவே என்று எங்குவதும், பட்ட இந்தக் கடனை என்ன வகையில் சம்பாதித்துத் தீர்ப்போமென்று திகைப்பதுமான இந்த மாதிரிப் பெருழச்சுகளை இனி விஸ்தாரமாய்க் காணலாம்.

தீபாவளி வந்துவிட்டதென்ருல் கொண்டாட்டம் யாருக்கு? சிறு குழந்தைகளுக்கு. என்? தீபாவளி யன்றைக்கு நன்ருக உடுக்கலாம், புது வஸ்திரம் தரிக்கலாம், சுடலாம், நன்ருக நாலு பதார்த்தங்களுடன் புசிக்கலாம்—என்று புரட்டாசி மாதத்திலேயே—இன்னும் தீபாவளிக்கு எத்தனை நாள் இருக்கிறது—பள்ளிக்கூடத்துக்குத் தீபாவளி லீவ் எப்போது என்று நாள் கணக்கு பார்க்க ஆரம்பித்து விடுகிருர்கள்.

இன்னும் யாருக்குக் கொண்டாட்ட மென்ருல், புதிதாக விவாகமான மாப்பிள்ளைகளுக்குத் தான். மாமியார் வீட்டுக்குச் செல்லலாம், சரிகை பட்டாவளிகள் தரிக்கலாம், நல்ல சாப்பாடுகள் வெகு வெகுவான மரியாதைகளுடனே உண்ணலாம், இப்படியும் சில நாள் உல்லாஸத்திலிருந்து வரலாம்—என்று நினைக்கிருன். இவ்விதமே பெண்ணின் தாயும்—இத்தனை நாள் பிரியாமலிருந்து தன்னைப்பிரிந்து, இப்போது கணவனின் அகத்துக்குச் சென்றுள்ள தனது குமாரத்தியின் திருமுகத்தை ஆசையோடு காண எதிர் பார்த்து, எப்போது தன் மகளும் மருமகனும் வருகிருர்களோவென்று அதே சிந்தையாய்க் காத்து நிற்கிருள்.

இப்படியே, குடும்பத்திலேயே வீட்டி லுட்கார்ந்தபடியே தின்றுகொண்டு காலங்கடத்திவிடப் பார்க்கிறவர்களும், சுளைய மிடுபவர்களும் இந்தக் கிழிந்தவேஷ்டியை இனி முதுகு துடைக்க, தலை துடைக்க வைத்துக்கொள்ளலாம்; உடுத்திக்கொள்ளப் புது வேஷ்டி வந்து விடும்; நாலு பேருக்கு வாங்குகிறபோது நமக்கும் அகப்படாமல் போகுமா என்று தாமும் தீபாவளி சமயத்தை எதிர் பார்க்கிருர்கள். வருஷ முழுவதுக்கும் க்ஷவரம் இலவசமாகச் செய்கிற நாவித பண்டிதனும், தனது வருஷா வருஷ வழக்கத்தைப் போல, அவர் புடவை எடுத்துக் கொடுப்பார்—இவர் வேஷ்டி வாங்கித் தருவார்—அங்கே ஒன்று—இங்கே ஒன்று—எல்லாம் சேர்த்

தால் ஒரு ஐந்து சேலையாவது கிடைக்கும்; வேஷ்டிகளும் அந்த கணக்குக்கு மேலேயே வரும்—என்று தன் கணக்குகளை எண்ணு கிறான். வண்ணானும் இனி தன் வீட்டுத் திண்ணையிலே வந்து குவிந்து, அடியிலே கறையான் பிடிக்கப்போகிற தீபாவளி மூட் டையிலே, நல்லதாக—சரிகை போட்டதாக—ஒரு நாலைந்தை "அமுக்கி" விட்டால் தான் நல்லதென்று இப்பொழுதே அந்தக் கணக்குகள் பார்க்க ஆரம்பிக்கிறான்.

ஜவுளிக் கடைக்காரர்களோ கடைக்குள் செல்லரித்த சேலைகளெல்லாவற்றையும் வெளியில் தொங்க விட்டு, அதற்கான அலங்காரமாகப் பந்தல் முதலியவைகளும் அமைத்து, அந்தப் பந் தல் செலவையும் இந்த ஜவுளியில் சேர்த்து, சாயமே போகா தென்று ஆயிரம் சத்தியங்கள் செய்து ஏமாந்தவர் பணம் பறிக்க ஆரம்பிக்கிறார்கள். மளிகைக் கடைக்காரனோவென்றால் ஒவ்வொரு சாமானுக்கும் ஒவ்வொரு துட்டு விலையை அதிகமாக ஏற்றி விடுகி றான். எண்ணெய்க் கடைக்காரனோ, நிலக்கடலை எண்ணெயைக் கலந்து ஏற்கெனவே தயார் செய்து வைத்து விடுவதற்காக அந்த வேலையை இப்பொழுதே தொடங்கிக் கொள்கிறான் இவ்விதமாக ஊர் முற்றிலும் வியாபாரமும் ஆரவாரமும், மோசங்களும், சுய நலச் செய்கைகளுமாக ஆனந்த தாண்டவம் புரியத் தொடங்கிக் கொள்கிறது.

இவ்வளவு வைபவத்தினுள்ளே—இனி திண்டாட்டப்படு வோரும் ஒரு புறத்தே கிடக்கிறார்கள்! சென்ற வருஷத்தில் தன க்கு அருமையாக இருந்தவர்களை இழக்கக் கொடுத்தவன்—தன க்கு இந்த வருஷம் தீபாவளியில்லாமல் போயிற்றே, போன வரு ஷம் அவர் இருந்தார்—இவர் இருந்தாரே—என்று அவர்களை நினை த்து ஏங்குகின்றான். அவ்வளவு கடனும் உடனும் பட்டு இப் போது தானே மகளை விவாகம் செய்து கொடுத்தோம்; ஆடிக்கு மருமகனைத் தருவித்துப்பட்ட கஷ்டமும், நோட்டங்களும், திட்டு களும் போதாதா? இனி இந்தத் தீபாவளிக் கடனையும் செய்து தீர்க்க வேண்டுமே, இதுபோக; இனி பொங்கலுக்கு வேறே அழை க்கவேண்டியதாயிருக்கிறதே: கடன் உயர்ந்து விட்டதே—வட்டி விஷம்போல் ஏறுகிறதே—என்று தலையிரங்கி விசாரப்படுகிறான்.

இனி, சென்ற வருஷம் தனது பிரிய பர்த்தாவோடுமிருந்து, மஞ்சள் குங்குமமாக விளங்கிய பெண்கள், ஐயோ! போன வருஷம் தீபாவளி எவ்வளவோ நன்ருக நடந்ததே, மஞ்சள் குங்குமத்தோடு விளங்கினேமே, நோன்பு எடுத்தோமே, நலுங்கு வைக்கப் போனேமே, அந்தக் கல்யாணத்தில் மங்கள ஆர்த்தி எடுத்தோமே, அந்தோ தெய்வமே அத்தனையும் போயிற்றே!—என்று அங்கலாய்க்கிருர்கள். இனி, மாற்ருந் தாய்மார் தமது கணவனை நோக்கி—உன் மூத்த மனைவியின் குமாரர்களுக்கும், அவர்களின் சம்சாரங்களுக்கும் மட்டும் நல்ல ஜவுளிகளும் சேலை வேஷ்டிகளும் வாங்கினயே; நான் தான பாவம் செய்தேன், என் வயிற்றில் பிறந்தவர்கள் தான பாவம் செய்தார்கள், அந்த சேலையைக் கொண்டு போய்க் குப்பையிலே போடு, நாலுபேர் முகத்தில் விழிக்கிறதற்கும் லஜ்ஜையாக இருக்கு—என்று பிரசங்கம் ஆரம்பித்துக்கொள்கிருர்கள். இறந்துபோன தமக்கையின் பிள்ளைகள் தன் ஆதரவில் இருந்தால், அந்தத் தமக்கைக்குப் பிறகு அவள் புருஷனுக்கு இரண்டாந்தாரமாக வந்திருக்கிற அவள் தங்கையே, உடற்பிறப்பாக இருந்துங்கூட—தன் குழந்தைகளுக்கு நாலைந்தும் இஷ்டப்பட்டதும், நல்லதுமாக ஜவுளிகளை வேண்டிய வரையில் எடுத்துவிட்டு, தன் தமக்கைக் குழந்தைகளுக்கு-உதவாததும், ஏதோ கடனுக்குச் செய்து தொலைப்பதுமான மாதிரியில், ஆளுக்கொரு வேஷ்டியும் சொக்காயுமாக எடுத்து, சனியன் தீர்ந்தது என்கிருள். இப்படியே தன் மூத்த தாரமான அத்தமக்கைக்குப் பெண் குழந்தைகளிருந்தால், அதற்கும் அரை கஜத்துப் பாவாடை—சேலை வாங்கி--உன் பவிஷுக்கு இவ்வளவு போதாதா—என்று முகத்திலடிக்க வருகிருன்.

இனி விவாகத்தை எதிர் பார்த்து வீட்டிற்குள் அடைபட்டுக் கிடக்கும் யுவதிகளோ, எனக்கு அது வேண்டும், இது வேண்டும், தீபாவளிக்கு ஒரு புது நகை செய்யவேண்டும் என்று தொந்தரவு கொடுக்க ஆரம்பித்துக் கொள்கிருர்கள். இவர்களுக்கெல்லாம் நடுவே வருணனும் புறப்பட்டு ஊரெங்கும் மழையும், வீதி எங்கணம் சேறும் சகதியுமாக்கி தன் ஆரவாரத்தைக் காண்பிக்கின்ருன். இதன் மத்தியில் தீபாவளியும் வருகின்றது. சில்லரைக்

கடைகளெல்லாம் பட்டாசுக் கடைகளாக வெகு பசந்தாக மாறு கிறது. சென்ற வருஷத்தில் விற்காத மீந்தவற்றை இந்த வருஷம் விலைப்படுத்தி விடப்பார்க்கிறார்கள். சிறுவர்கள் தங்கள் பட்டாசு களில் பாதி சுடாததைக் கண்டு விசனிக்கிறார்கள். எந்தப் பட்டா சுக் கடை அதிகக் கூட்டமோ அந்தக் கடைதான் நல்ல கடை என்று தீர்மானித்து விடுகிறார்கள். டப் டுப் சத்தம் தீபாவளி இர வெல்லாம் கேட்கிறது. அதற்கு முந்தியும் பிந்தியுமாக இளைஞர்க ளிற் சிலர்—பட்டாசில் நெருப்பு பற்றியதா—என்று குனிந்து பார்ப் பதிலும், பாண மருந்துகளை வாங்கி வந்து அரைப்பதிலுமாக அபா யங்கள் நேரிட்டு வெடித்து, கண்ணிலும் கையிலும்பட்டு அரகரா சிவ சிவா—என்று ஆஸ்பத்திரிக்குக் கொண்டுபோகப்படுகிறார்கள்.

இன்னொரு பக்கம் வீடுகளெல்லாம் சுண்ணும்படித்து சிங் காரமாக, எங்கும் பட்டாசுகளும் பாண வேடிக்கைகளுமாக, ஓடிப் போனவர்களெல்லாம் வந்து கூடிக்கொள்ள, உடமை மேலே உடமை போட்டு மினுக்கிக்கொள்ள, எல்லோரும் விடிய நேரத்தில் மங்கள ஸ்நானம் செய்து புது ஆடை உடுத்தி பலகாராதிகளை ஆவ லுடன் புசிக்க ஆரம்பிக்கிறார்கள். இதிலே அன்று சுத்தமும் சுசி கரமுமாக இருக்கும் வழக்கத்தைக் கொண்டோர் சிலராக; அன் றைக்குத்தான் தமது மதுமாம்ஸ வீக்கத்தைத் தணித்துக்கொள்ள ஆரம்பிப்போர் பலராக; இதனிடையே சாராயவர்க்கங்கள்—பிராந் தி புட்டிகளும் வந்து பரிமளிக்க, போடப்போடப் பொன்னிற மென்று ஆனவரைக்கும் தின்று அழித்துத் தீர்க்கிறார்கள். பொழு தும் விடிகிறது. குஜராத்தி மார்வாடிகளுக்கு அன்றைய தினம் புது வருஷப் பிறப்பு. அவர்கள் புதுக்கணக்கு எழுதும் புண்ணிய தின மும் அதுவே.

இதனிடையே கொல்லை கூட்டுபவள், நாவிதன், வண்ணான், தெருக்கூட்டி, வேலைக்காரர்கள், சேவகர்கள், அந்த இந்த உத்தி யோகஸ்தர்கள், பாகவதர்கள்—இன்னும் பலருமாகச் சூழ்ந்து தீபாவளி வேஷ்டிகளையும் சன்மானங்களையும் வசூலித்துப் போக நெருங்கிக் கொள்கிறார்கள். அமாவாசையும் புறப்பட்டு விடுகிறது. சாயந்திர நேரத்திலே கேதார கௌரி விரதம் என்ற நோன்பு தோன்றிக் கொள்கிறது. பெண்கள் நோன்பெடுக்கத் தட்டோடு

போக, பையன்கள் டப்டுப் பாண வரிசைகளுடன் பாரா கொடுத்துச் செல்ல, அங்கே புரோகிதர் பாடு பெரிய கொண்டாட்டம்! ஏதோ தமக்குத் தெரிந்ததும் தெரியாததுமான மந்திரங்களை அரை குறையாக, மொணமொணேச்சாரணம் செய்துவிட்டு வந்த பணத்தை வகையாய் வாங்கிக் கொள்கிருர். அன்றிரவோடு நோன்பும் பூர்த்தி பெறுகிறது. நோன்புக் கயிறும் கையிலேறுகிறது. தீபாவளியும் முடிவுக்கு வருகிறது. இடைப்பொடிய வேலை செய்த பெண்மணிகளெல்லாம் அப்படா—என்று உட்கார்ந்து ஆயாஸம் தீர்த்துக்கொள்ள ஆரம்பிக்கிருர்கள். இப்பண்டிகை—நோன்பு—இவற்றின் கருத்து—தாற்பாரியங்களை அறிந்தோர் சிலரும், தெரியாதோர் பலருமாக, எப்படியோ ஆநந்த தாண்டவத்துடனும், "கடனேடு கடனுய் நெய்யிலே சுடடி பணியார" மென்பதாய்க் கொண்டாடி முடிவுக்கு வருகிருர்கள். உலக வாழ்வில் பல்வகைத்தாய இடுக்கண்களால் புண்பட்டார்க்கு ஒருவித பரிகாரம், உற்சாகம், புளகிதம்—துக்க மறதி, தோன்றுதற் பொருட்டாக இவ்வித பண்டிகைகள் உதயமாயின போலும்! என்னவோ பிரபஞ்ச மாய்கை!!

# இயல், இசை, நாடகம்.

காவியமானது இயல், இசை, நாடகம் என மூவகைப்படும். இயலானது சாதாரண நடையில் வழங்கி வரும். சாமான்யமான நடையை யநுஸரித்து இதுவெல்லாம் வாக்கிய ரூபமான வசன நடையிலும், பேச்சு நடையிலும் இருக்கும். இதுவே மனேபாவத்தை வெளிப்படையாய்க் கூறுவது.

இசையானது பற்பல விதமான அளவிற் குட்பட்டு எழுத்து, இசை, சீர், தளை, தொடை முதலான லக்ஷணங்கள் அமைந்துள்ள—பாடல்கள்—என்னும் செய்யுள்களாக விளங்கி நிற்பதாம். இந்தச் செய்யுள் ஆசு, விஸ்தாரம், மதுரம், சித்திரம் என நான்கு வகைப்படும். நினைத்தபோது முன்பின் யோசிக்காத விஷயத்தைப்

பற்றிப் பாடுவது ஆசுகவி; ஒன்றைப்பற்றிய வர்ணனை முதலிய வைகளுடன் உபமானாதிகளோடு பாடுவது விஸ்தாரக் கவி; சொற் சுவையும் பொருட் சுவையும் மலிந்திருப்பது மதுரகவி; பந்தம், ரதபந்தம் முதலான பந்தங்களில் கிரமப்படி எழுத்தை யடைத்தால், பாடல்களாக வரும்படி பாடுவது சித்திரகாவியம். இன்னொரு விதமும் உண்டு. முக்கியமான விஷயத்தைப் பல்லவி என்றும், அதை யொட்டிய சாராம்ஸமானதை அநுபல்லவி என்றும், மற்ற விஸ்தாரத்தைச் சரணங்கள் என்றும் அமைத்துப் பாடுவதாகும். இந்த இரண்டு பகுதிகளையும் ராக தாளங்களுக்கு இணங்கப் பாட லாம். இந்த இசையானது வெகுவாய்க் கற்றவர்களுக்குப் பொருள் விளங்கும் பகுதியாய் இருக்கும்.

இனி, நாடகம் என்பது, இயல், இசை—என்னும் இரண் டையுங் கலந்து ஒவ்வொரு விஷயத்தையும் கண்களுக்குப் புலப் படும்படியாக, அதற்கேற்ற ரூப உதாரணங்களுடன் நடத்தி, நடி த்துக் காட்டுவதே நாடகமாம். இயலையும் இசையையும் அறியக் கட்புலனன்றி வெளி உபகரணங்கள் வேண்டியதில்லை. ஒருவனே படித்தறியக் கூடிய மனோபாவ உணர்ச்சி நிலையை யநுஸரித்தது; ஆனால் நாடகமோ ஒரு குறிப்பிட்ட விசேஷக் காட்சியை வெளி உப கரணங்களுடன், அதன் சந்தர்ப்பத்தை யொட்டி, அந்த நாடகக் கிரந்த கர்த்தாவின் மனோபாவ உணர்வின் நிலைமைக்கு ஏற்றவாறு, வேஷங்களால் வெளிப்படையாய்ப் பேசியும், பாடியும், அபிநயித் தும் ஆடும் ஆட்டமாம்.

ஒரு சரித்திரத்தை வசன நடையில் படிப்பது ஆநந்தமே. அதையே பாடல்களாகப் படித்துப் பொருள் தெரிந்து கொள்வது அதைவிட விசேஷம். ராகதாளங்களுடன் பாடுவது இன்னும் சிலாக்கினைக் குரியதே. வசனப் பேச்சுகளும், பாடல்களும், சங் கீதமும் கலந்துள்ள நாடகத்தைப் படிப்பதும்—ஆனால் அதைவிட விசேஷம்—எல்லாவற்றிலும், நாடகத்தைச் சரியானபடி ஸ்வபாவ மான பாவனைகளுடன் நடிப்பதைப் பார்ப்பதே மெத்தவும் மேலா னது. ஒவ்வொரு தேசத்தின் குண ரஸாநுபவ மளாவின நாகரீகத் தை அளவிட்டுக் காட்டுவது நாடகமே யாகையால், நாடகந்தான் காணக்கூடாதவற்றை யெல்லாம் பிரத்தியக்ஷத்தில் காட்டக்கூடிய அவசிய மனோ வசீகரமான திவ்ய காவியமாம். இதுகாறும் கூறிய வற்றால் இயல், இசை, நாடகம்—என்பனவற்றின் விவரம் ஒரு வாறு விளங்கும்.

## பிரேமநாதன்.

☞ குறிப்பு:—முந்திய ஸஞ்சிகையைக் கவனித்துக்கொள்க ஸஞ்சீவபாபு முத்துசாமியைச் சோதிக்கச்செல்கிறார். மேற்பட்டு, மேற்பட்டு—என்று பேசுபவரைப்பற்றி ஒரு மறுப்பு வந்த பின், கதை தொடக்கமாகிறது. 37-முதல் 44-வரையுள்ள பக்க இலக் கங்களை 41-முதல் 48-வரையாகத் திருத்திக்கொள்க.

தோட்டத்துக்குப் போயிருப்பதாகக் கேள்விப்பட்டு, அதற்கு மேற்பட்டு அவ்விடம் போய் அவரைக் கண்டு அதற்கு மேற்பட்டு பணத்துக்கு அதற்கு மேற்பட்டு அவசரமா யிருப்பதைத் தெரிவித்தேன். அதற்கு மேற்பட்டு இந்த சமயம் தன்னிடத்தில் பணம் இல்லை யென்று சொல்லிவிட்டார். அதற்கு மேற்பட்டு இதோ இவர் வீட்டுக்குப் போயிருந்தேன். அதற்கு மேலிட்டு இவர் ஆபீஸுக்குப் போய்விட்டதாக வீட்டில் சொன்னார்கள். அதற்கு மேற்பட்டு கடைசியாக அதற்கு மேற்பட்டு சாமான்களை வாங்காமலே வந்துவிட்டேன். அதற்கு மேற்பட்டு நான் என்ன செய்வேன்? என்னால் யாதொரு வஞ்சனையு மில்லை"—என்று சொல்லி முடித்தார். மற்றொரு நாள் இவர் சிநேகிதர்களிடம் வரும்போது அதோ மேற்பட்டுக் காரர் வருகிறாரென்று—நேசர்களி லொருவர் அவர் வந்தவுடனே; என்னங்கோ ஸார்! அன்றைய தினம் நீங்கள் வந்தீர்களே, அதற்கு மேற்பட்டு நானும் உமக்காக வந்து காத்துக் கொண்டிருந்தே னல்லவா? அதற்கு மேற்பட்டு நீங்களும் எத்தனை மேற்பட்டுடன் பணம் கிடைக்காததைப்பற்றி சொல்லிவிட்டீர்கள். அதற்கு மேற்பட்டு இன்றையதினம் எத்தனை மேற்பட்டுடன் வந்தீர்கள்? அதற்கு மேற்பட்டு, இதற்கு மேற்பட்டு, உமக்கு மேற்பட்டு, எனக்கு மேற்பட்டு அப்பாலும் என்ன மேற்பட்டு இப்போது கொண்டுவந்திருக்கிறீர்களென்று பரிஹாஸம் செய்யவே, வந்தவர் அசந்து வெட்கத்துடன் சிரித்துக்கொண்டு நிற்க;—மற்றவர்களும் ஆமாம், ஏதாகிலும் சங்கதியைச் சொல்லித் தொலைக்க வேண்டுமென்றால், சீக்கிரம் கூறி முடிவுபடுத்தாமல் மேற்பட்டு, மேற்பட்டு என்று அனாவசியமாய் அடிக்கடி உபயோகிப்பதானது அசங்கிதமா யில்லையா வென்றார்கள். அன்றுதொட்டு அவரும் அவ்வழக்கத்தினை மெதுவாக அகற்றிவிடத் தலைப்படுவதானார். இவ்விதமே சில பெண்களுக்கும் அப்பியாஸ மிருப்பதோடு அஸங்கிதமாய் உதட்டைக் கோணிக்கொள்கிறது முண்டு. இவைகளை சிநேகர்—சிநேகைகளாகிலும் மேல் காட்டிய பிரகாரம் எடுத்துக் கூறித் திருத்துவார்களாயின் நலமாயிருக்கும். இங்கு நமது முத்துசாமியின் ஸம்பாஷணைகள் வருமிடங்களில் அவன் உபயோகித்துள்ள அனாவசிய வழக்கச் சொற்களை அப்படியே உபயோகித்து வாசகர்கட்கு வெறுப்பைத் தரக்கூடாதென்றெண்ணி, அவற்றைக் கிரமப்படுத்தித் திருத்திப் பதிப்பிக்கிறோம்.

ஒரு நாள் இரவு ஏழுமணி இருக்கும். ஸஞ்சீவபாபு திடீரென்று முத்துஸாமியின் அறைக்குள் பிரவேசித்தார். அவன் இவரைக் கண்டதும் நடுக்கங்கொண்டான். அவனை நோக்கி,

ஸஞ்சீவபாபு:—"முத்துஸாமி! நீ அரசப்பனுக்கு அதிக சகாய புருஷனாய் இருந்து வருவதாக அவன் வீட்டினர் உன்னைப்பற்றிக் கூறி சிலாக்கியப்படுத்துகிறார்கள். கனகவல்லி கூட உன்னைப் பற்றி உயரிய அபிப்பிராயம் தந்தாள். அவ்வளவுக்கு நீ பரிசுத்தமும் யதார்த்த உள்ளமும் உடையவனாயின் என்னைக்காணும் சந்தர்ப்பமெல்லாம் நின் தேகம் நடுக்கமுறவானேன்? மனதில் கபடம், ஏதாவதொன்றில் சம்பந்தம்—இருந்துகொண்டிருந்தால் தானே ஒரு போலீஸ் உத்தியோகஸ்தனுக்கு அஞ்சவேண்டும்?"—என்று வினவினார்.

முத்துஸாமி:—"பொதுவாகவே போலீஸார் என்றால்—அதிலும் துப்பறியும் போலீஸார் என்றால் பொதுநலத்துக்கு உழைப்பவர்கள் முதலாக—எல்லோருக்குமே அச்சந்தான். யாதொரு காரணமுமின்றி தாங்கள் என் வீட்டிற்குள் ஏன் வரவேண்டுமென்பது தான்—இந்த எனது ஆலோசிப்பே என்னை நடுங்கவைத்தது?"

ஸஞ்சீவ:—"இந்த சாதுரியம் என்னிடத்தில் நடவாது. எனக்குச்சரியான பட்டுக்குல்லா போடப்பார்க்கிற உனது ஜெபம் நிறைவேறுவது கஷ்டம். வெளுத்ததெல்லாம் பாலென்று நினைத்து ஏமாறுகிற "பிரஜானுகூலன்" பத்திராதிபர்போன்றவர்களுக்கு தான் அந்தக் குல்லா சரி! நானோ—கண்ணைப் பிடுங்கி எறிந்தாலும் கண்கட்டுவித்தை என்று சொல்லுபவர் பக்கத்தைச் சேர்ந்தவன். அரசப்பன் சுகப்படவேண்டுமென்று அவனுக்காக நான் வந்துபோய்க்கொண்டிருக்கிற விஷயம் நீ அறிந்ததே. அவனது பெட்டிகளையெல்லாம் சோதித்துப் பார்க்கவேண்டுமென்றும், ரங்கபாஷியம் நாயுடுவை விடுவிப்பதற்கு ஏதாவது கடிதங்கள் அகப்படக்கூடுமென்றும் நான் சொன்னதற்கு அரசப்பனின் தாயும் மனைவியும் எவ்வளவு அக்கரையுடனும் சம்மதித்து அவர்களே எனக்கு மேலாக ஒவ்வொன்றையும் ஆராய்ந்து—ஒவ்வொருகடிதத்தையும்—இதைப் பாருங்கள்—இதைப் பாருங்கள்—என்று என்னைப் பார்க்கச்சொன்னார்களே! வேணுகோபால் நாயுடுவின் இரண்டாவது உயில் பத்திரத்தை அவன் மனைவியன்றோ எடுத்துக்கொடுத்தாள். அவர்கள் மனதில் கபடமிருந்தால் என்சோதனைக்கு அவர்கள் ஒப்புவார்களா? அரசப்பன் மனைவிக்கும் அவனைச் சேர்ந்தவர்களுக்கும் என்னைக்

கண்டால் சற்றேனும் அச்சமேயில்லை. என்னை எவ்வளவோ பிரியமாய் எதிர்பார்த்து, என்னால் அரசப்பன் பைத்தியம் விலகி க்ஷேமப்படவேண்டுமென்று ஆவல்—தாகம் கொண்டிருக்கிறார்கள். வேணுகோபால் நாயுடுவின் பெயரைச் சொன்னால் அரசப்பன் தாயார் கைதூக்கி வணங்கி அவரை நினைத்துக் கண்ணீர் விடுகிறாள். இப்படி அவர்கள் இருக்க, அதே வீட்டில் இன்னொரு குடியாக வசிக்கிற நீ மட்டும் என்னைக் கண்டு நடுங்குவானேன்? உன் மனைவி முதலானோரிடத்தில் அந்த நடுக்கங் காணாததேன்?"

முத்துஸாமி:—"தாங்களோ துப்பறியும் உத்தியோகஸ்தர். நானோ பரம ஏழை! எவ்விதப் பிசகும் செய்தவனல்ல. எவருக்கும் துரோகம் புரிந்ததுமில்லை. ஜனகலக்ஷ்மி, ரங்கபாஷியம் நாயுடு முதலியவர்களாலேயே அனேக சமயங்களில் என்குடும்ப ஜீவனமும் விசேஷாதிகளும் நடந்திருக்கின்றன. அக்குடும்பத்தாரின் நன்மையை நாடும் தாங்கள் அடியேனிடத்து மட்டும் ஸம்சயம் பாராட்டுவதென்னவோ? இதுவும் என் போதாத காலக்கூறே!"

ஸஞ்சீவ:—"நிரபராதியான ஒருவனை ஒரு போலீஸ் உத்தியோகஸ்தன் குற்றமுள்ளவனென்று அபாண்டமாய்க் கூறினால், சாதாரணமாக அதை எதிர்த்து மறுக்கும் இயற்கையின் சுபாவத்தைக் கூட உன்னிடத்தில் காணாதது என் ஐயத்தைப் பலப்படுத்துகின்றது. நீ எதற்காக என்னிடத்துத் தாழ்மையுடன் பேசவேண்டும்? சுண்ணாம்புக்காரத்தெருவுக்கு சென்ற மூன்று மாதங்களாக நீ பட்வாடா செய்து வருவதில் கிரமமாக நடந்துகொண்டிருக்கிறாயா?"

முத்துஸாமி:—"என் ஆண்டவனே! இன்னும் தாங்கள் என்னென்ன கேள்விகள் கேட்கப்போகிறீர்கள்?"

ஸஞ்சீவ:—"உன் பேச்சுகளால் நீ இப்பொழுதுதான் முதன் முதலாகக் கிரமம் தப்பி நடக்க ஆரம்பித்தவன் என்று தெரிகிறது. நான் தலைமைத் தபாலாபீஸில் உன்னால் இன்னின்னவைகள் பட்வாடா செய்ய உன் வசம் ஒப்புவிக்கப்பட்டன வென்பதற்கு சென்ற மூன்றுமாதம் வரைக்கும் ஒரு குறிப்பான கணக்கு எடுத்துக்கொண்டேன். நான் இவ்வளவு தெரிவித்தது போதுமென்று நினைக்கிறேன். ஜனகலக்ஷ்மியிடத்துக்கும் நேற்று சென்று விசாரித்து வந்திருக்கிறேன் என்பதும் உன் மனதி லிருக்கட்டும்."

முத்துஸாமி:—"எனது கெட்டகாலம் என்னை இவ்விதம் அலைக்கழிக்கின்றது. மற்றவனை ஏமாற்றியவனை மற்றவன் ஏமாற்று

வான் என்பது உண்மையே. தாங்கள் என் விஷயமாய் என்ன தவறுதலைக் கண்டு பிடித்தீர்கள்?''

ஸஞ்சீவ:—"அட நாயே! நான் எவ்வளவு சாந்தமாகக் கேட்கிறேன்? இன்னுமா வம்பளக்கிருய்? "ரிஜிஸ்தர் கடிதங்கள்"—போதுமா—நான் இவ்வளவு சொன்னது?''—என்று கன்னத்தில் பளீர் என்று அறைந்தார். முத்துஸாமி அலறிக்கொண்டு உடனே தனது கைப்பெட்டியிடம் ஓடினன்.

அவன் தனது கைப்பெட்டியைத் திறந்து மூன்று ரிஜீஸ்தர் கடிதங்களை எடுத்துக்கொடுத்து ஸஞ்சீவபாபுவின் காலில் வீழ்ந்து தன்னைக் காப்பாற்றவேண்டுமென்று ரோதன சப்தத்துடன் கெஞ்சினன். அக்கடிதங்கள் ஏற்கெனவே உடைக்கப்பட்டிருந்தன. அவற்றின் தபால் முத்திரைகளையும், அவை திரிச்சினப்பள்ளிக்கு வந்த தேதியையும் பார்த்து விட்டு, அக்கடிதங்களை வெகு சிரத்தையுடனும் ஸஞ்சீவபாபு மனதிற்குள் தாமே படித்தார் அக்கடிதங்கள் ஜனகலக்ஷ்மியின் விலாஸத்திற்கு அனுப்பப்பட்டிருந்தது. மூன்று கடிதங்களின் எழுத்தும் கையொப்பமும் ஒரே விதமாக இருந்தது. அக்கடிதங்கள் வருமாறு:—

---

## 1-வது கடிதம்.

மான்செஸ்டர் லண்டன்.

அன்பு மிகுந்த அம்மா * * *

நமஸ்காரம். தங்களின் மருமகனை பிரேமநாதன் அவ்விடம் நிலங்கள் வாங்கும்பொருட்டாக திரிச்சினப்பள்ளிக்கு வந்தவர்—இன்னும் இங்கு திரும்பினரில்லை. அவரது க்ஷேமலாபமும் தெரிவதற்கில்லை. அவருக்கு வேண்டிய பூஸ்திதிகள் இங்கு அதிகமாக இருக்கின்றன. தாங்களும் தங்கள் பர்த்தாவும் அவருக்குப் பாத்தியஸ்தர்களாதலின் அவரைப்பற்றிய விவரங்களுக்கும், எப்போது அவர் இங்கு திரும்புவாரென்பதற்கும் உடனே விடை எதிர்காண அவா. தாமதம் கூடாது. கடாக்ஷிக்கவேண்டும்.

ஊழியன், கிருஷ்ணமூர்த்தி.

விலாஸம்:—

பத்திராதிபர் "ஆனந்தா'' ஆபீஸ்,

மான்செஸ்டர், லண்டன்.

## 2-வது கடிதம்.

மான்சேஸ்டர் லண்டன்.

கனம்பொருந்திய அம்மா, * * *

அன்னியனான ஆடவனொருவனுக்கு எவ்விதம் கடிதம் வரைவதென யோசிக்கிறீர்கள்போலும் ! தங்கள் பர்த்தாவைக்கொண்டாயினும் எழுதச்சொல்வது உபகாரம். எனது ரிஜிஸ்தர் கடிதத்திற்கு பதில் காண்கிலேன். அதற்கான ரசீதுமட்டுமே பெற்றேன். கையெழுத்து பேதப்படுகிறது. எப்பக்கம் திருப்பினும் கலக்கமா ? உடனே பதில்.

அடிமை, கிருஷ்ணமூர்த்தி.

---

## 3-வது கடிதம்.

மான்சேஸ்டர் லண்டன்.

அம்மா ! * * *

அதிக அவசரம். என்ன மாயமிது ? எனது முந்திய இரு ரிஜிஸ்தர் கடிதங்களுக்கும் மௌனம் சாதிப்பதின் காரணமென்ன? தாங்களெல்லோரும் சுகம்தானா? பிரேமநாதனின் சமாசாரம் என்ன? கடிதம்—அல்லது—தந்தி.

எதிர்பார்க்கும் கிருஷ்ணமூர்த்தி.

ஸஞ்சீவ:—"இக்கடிதங்கள் ஸம்பந்தமாக நீ செய்துள்ள தவறு மிகவும் பெரிது. ஒன்றிரண்டல்ல ; மூன்று ரிஜிஸ்தர் கடிதங்களையும் நீ மறைத்துவிட்டாய். இந்த நிமிஷத்தில் நீ போலீஸார் வசமானால் உன் கதி என்ன?"

மூத்துஸாமி:—என் ஆண்டவனே ! நான் மிக்க ஏழை! நான் இந்த தபாலாபீஸ் வேலையைத் தேடிக்கொள்வதற்குப் பட்டபாடுகள் அநந்தம். இன்னொரு ஊரில் ஒரு பெரிய மனிதரின் வீட்டில் மசாலை முதலியன அரைத்துக்கொடுத்து, சோறு முதலியனவும் சமைத்து, அவர்கள் சொற்படியெல்லாம் நடந்து அவர்கள் சிபாரிஸால் ஜாமீன் கொடுக்கப்பெற்று இந்த வேலைக்கு வந்தேன். திரிச்சியில் இரண்டு தடவை தபால்கள் பட்டுவாடா செய்வதை நான்கு தடவையாக மாற்றியபோது எனக்கு இந்த வேலை ஸ்திரமானது. நான் இதுவரை தவறி நடந்தவனேயல்ல. வீட்டின் செலவுகளுக்கு வகை காணாது ஏங்கிய சமயம் முதல் ரிஜிஸ்தர் கடிதம் என்னிடம்

தாப்பட்டது. அது ரங்கபாஷியம் நாயுடுவைக் கைது செய்ததற்குப் பிறகாகும். அது லண்டனிலிருந்து வந்திருப்பதாகத் தபால் முத்திரையால் தெரியவரவே ஏதேனும் நோட்டுகள் இருக்குமென்று நம்பி ஜனகலக்ஷ்மி அம்மாளின் கையெழுத்தைப்போல் தப்புக் கையெழுத்திட்டுவிட்டு வீட்டில் அதைப் பிரித்துப் பார்த்தேன், ஏதுங் காணேம். பிறகு வந்த இரண்டாவது, மூன்ருவது ரிஜிஸ்தர் கடிதங்களையும்—மூந்திய ரிஜிஸ்தர் கடிதத்தைப்பற்றி ஏதாவது பிரஸ்தாபம் அதனுள்ளிருக்குமோ வென்ற ஸம்சயத்தால் அதையும் நானே எடுத்துக்கொண்டேன். நான் கருதியவாறே முன்கடிதத்தின் பிரஸ்தாபம் தொடர்ச்சியாக அக்கடிதங்களில் இருந்தது. என் பெருந்தவறுதலை நினைத்து நினைத்து வருந்தினேன். இதனிடையே தங்களைக் கண்டேன். தங்களின் முகத்திலுள்ள போலீஸின் சாயலால் நடுக்கமுற்றேன். அதுவே தாங்கள் என்னை ஸந்தேகக் கண்களுடன் நோக்கும்படி செய்துவிட்டது. தாங்கள் மனம் வைத்தால் என்னைக் காப்பாற்றி விடலாம்''—என்று அழுதான்.

அவனுடன் ஜனகலக்ஷ்மியின் இல்லத்திற்குச் சென்ருர். அவன் செய்த தவறுதலையும் விளக்கினுர். ஜனகலக்ஷ்மி மனப்பூர்வமாக அவனை மன்னித்தாள். ஸஞ்சீவபாபு அவன் கழுத்தில் ஒரு கையைக் கொடுத்து வெளியில் நெட்டித்தள்ளிக் கதவை மூடினுர். இக்கடிதங்கள் எழுதியவரை லண்டனுக்குச் சென்று கண்டுகொண்டால் ஏதேனும் விவரங்கள் தெரியவருமென்ருர். அதற்கு ஜெகனலக்ஷ்மியும் சம்மதிக்கவே, ஸஞ்சீவபாபு அவ்விஷயத்தை அவ்வளவில் நிறுத்தி, பிரேமநாதனின் சவம் காணுமற்போனதின் சம்பந்தமான பேச்சை ஆரம்பித்தார்.

ஸஞ்சீவ:—''டாக்டர் இராமநாதர் தம்மிடம் ஒப்புவிக்கப்பட்ட பிரேமநாதனின் ஸவத்தை ஒரு வண்டியிலேற்றி அனுப்பி மறைத்து விட்டதாகவல்லவா அவர் மீது கேஸ்.''

ஜனகலக்ஷ்மி:—''அம்மட்டிலில்லை. அந்த சவம் வண்டியில் ஏற்றப்பட்டதை அந்த டாக்டரின் சேவகனது மனைவி கண்டுவிட்டாளென்று, அந்த டாக்டர் அவளைச் சுட்டுவிட்டதாகவும் கூட ஒரு கேஸ் ஏற்பட்டிருக்கிறதல்லவா ?''

ஸஞ்சீவ:—'அவ்விதம் சுட்டுவிட்டிருப்பாரென்று சாக்ஷி கூறியவர்கள் ஜெகநாத நாயுடுவும் அவர் குமாஸ்தாவான ஸ்ரீநிவாஸப் பிள்ளையுமே. அந்த ஸாக்ஷியத்தால் அதே ஸமயத்தில் அவ்விரு

வரும் அந்த ஆஸ்பத்திரிக்கு ஸமீபமாக்வே இருந்திருக்கிறார்க ளென்று அநுமானிக்க போதிய ஆதாரம் உண்டாகிறது.'

ஜனக லட்சிமி:—"தங்களின் ஊகிப்பும் வெகு பொருத்தமே. ஜெகநாத நாயுடுவே அந்த சேவகனின் மனைவியைச் சுட்டுவிட்டிரு க்க வேண்டுமென்பது தங்களின் அபிப்பிராயமா?"

ஸஞ்சீவ:—"ஆனாலும் சேவகனின் மனைவியைச்சுட வேண்டிய நிமித்தம் ஜெகநாதனுக்கு ஏற்பட்டிராது. அவள் ஒரு எளியவ னின் மனைவி. அவள் மீது ஜெகநாதன் துவேஷம் சாதிக்க எவ்வித காரணங்களும் இல்லை. டாக்டர் இராமநாத முதலியாரோ மிக வும் கண்டிப்பான மனிதர். லஞ்சம் முதலியவைகளுக்கு ஆசைப் பட்டவரல்ல. டாக்டருக்கும் ரங்கபாஷியத்துக்கும் இளமைதொட்டு நேசக்காற்று உண்டென்பதை ஜெகநாதன்,—அவனும் உங்களைச் சேர்ந்த ஒரு உறவினனே யாதலின்,— சாதாரணமாகக் கேள்வியா லும், நேரிலும் அறிந்து வைத்திருக்கவேண்டும் அப்படிப்பட்ட டாக்டரிடம் பிரேமநாதனின் சவம் ஒப்புவிக்கப்படுகிறது. ஆகவே அந்த டாக்டர் எவ்வகையிலும் ரங்கபாஷியத்திற்கு அநுகூலமாக வே தான் தமது அபிப்பிராயத்தைத் தருவார். உதாரணமாக,— பிரேமநாதன் மார்பு அடைத்துத் திடீரென்று இறந்தானே தவிர வேறில்லையென்றும், தனது தாய்மாமனை ரங்கபாஷியம் நாயுடு வைப் பார்ப்பதற்கு மாடியின் மீது ஏறிய சமயம் திடீரென்று மார் படைத்து மூர்ச்சித்து விழுந்து, அது மரணமாக முடிந்திருக்கலா மென்றும், ஈரற்குலையும் குண்டிக்காயும் அதற்கு ஏற்றபடி வெகு கேவலமாகப் பழுதுபட்டுப்போயிருக்கிறதென்றும், அப்படிப்பட்ட நிலைமையில் பிரேமநாதன் இதுவரை ஜீவித்திருந்ததுதான் பெ ரிய ஆச்சரியமே தவிர, அவன் இப்போது இறந்து விட்டது ஒரு வியப்பாக மாட்டாதென்றும், மற்றபடி அவன் அடியுண்டாவது வேறு விதமாயாவது இறக்கவில்லையென்றும் பிரேத பரிசோதனை யில் ஏற்படுகிறதாக—டாக்டர் இராமநாத முதலியார் தமது நண்ப ரான ரங்கபாஷியத்திற்கு சாதகமாக அபிப்பிராயம் தந்து விட் டால்,—அப்படிப்பட்ட அபிப்பிராயத்தினால்—ரங்கபாஷியத்துக்கு விடுதலை கிடைத்து விடுமாயின் — ஜெகநாதநாயுடு தனது மனைவி யான கனகவல்லியின் சொத்துகளை—தான் அவளுக்குப் புருஷன் என்ற பாத்தியதையைக் கொண்டு—அபகரித்துக் கொள்வதற்காக செய்துகொண்டிருக்கும் விஸ்தாரமான யோசனைகளானது—ரங்க பாஷியத்தின் விடுதலையினால்—கெட்டு நிறைவேறாமற் போய்விடக்

கூடும். ஆகவே டாக்டர் இராமநாத முதலியாரைச் சுட்டுவீட்டால், பிரேமநாதனின் சவமானது—அப்போது வேறொரு டாக்டரால் பரிசோதனை செய்யப்படவேண்டியதாகிறது. அந்தப்புது டாக்டரைப்பணத்தால் சுலபத்தில் மயக்கி சரிப்படுத்திவிட்டால், அந்தப் புதுடாக்டர் ரங்கபாஷியத்துக்கு எதிரிடையாக ஸவ பரிசோதனு அபிப்பிராயம் தரக்கூடியவராய் மாறலாம். இப்படியாக ஜகநாத நாயுடு கருதித்தான், அதற்கு அநுஸரணையாக டாக்டர் இராமநாத முதலியாரைக் கொன்றுவிடவேண்டுமென்று அவர்மீது சுட்டிருக்க வேண்டும். அதே சமயத்தில் தனது கணவனுக்கு சாதம்கொண்டு வந்த சேவகனின் மனைவி அங்கு எதிர்ப்பட்டுக்கொள்ளவும்—அவள் மீது துப்பாக்கியின குண்டுபெட்டு—அவள் இறந்திருக்கவேண்டும். அவள் இறந்த சமயத்தில் அந்த ஆஸ்பத்திரிக்கு சற்று தூரத்திலுள்ள ஒரு தான்ய மண்டிக்கருகே ஜெகநாத நாயுடுவும் ஸ்ரீநிவாஸ பிள்ளையும் இருந்திருக்கிறார்க ளென்பதற்கு, — அவ்விருவரும்—"டாக்டர் இராமநாத முதலியாரே அந்த ஸ்திரீயைச்சுட, தாங்கள் அதைப் பார்த்ததாகக் கொடுத்திருக்கும் வாக்குமூலமே,—போதுமான ஆதாரமாகும். கொலை, களவு இத்தகைய செயல்களில், அதைச் செய்தவனே நிரபராதிபோன்று நடித்து ஒரு பெரிய மனிதனைப்போல சாக்ஷியம் கூறவருவதும், தப்புகண்டு பிடிக்கும்படியாக என் போன்றவர்களை நியமிப்பதும் சாதாரண அநுபவங்கள் தான்"—என்று விவரித்தார்.

ஜனகலட்சிமி:— "இந்த ஊகிப்பு உறுதிபெறுமாயின், பொய் வாக்குமூலம் தந்ததற்கு ஜெகநாதனுக்கு சிக்ஷையொன்றும் ஏற்படாவோ?"

ஸஞ்சீவ:—"ஏர்படுந்தான். ஏதாவது குற்றம் நடந்தபோது, அதைக் குறித்து மேலான அதிகாரிகள்—தப்புவழியில் விழம் பொருட்டு—யாராவது பொய்ச் சங்கதிகளைத் தெரியப்படுத்தினல், அப்படிப்பட்டவர்கள் பினல்கோட் 203, 177, செக்ஷன்களின்படிக்கு இரண்டு வருஷம் வரை காவலுக்காவது, அபராதத்திற்காவது, இவ்விரண்டு தண்டனைகளுக்காவது உள்ளாவார்கள். ஆனல் இது ருசுவாயின், இக்குற்றத்தோடு கொலைக்குற்றமும் தொடர்ந்து ஜெகநாதன்—ஸ்ரீநிவாசன் இவர்களின் பூாடு திண்டாட்டத்திற்கு வந்து விடும். இது நிற்க, சமயபுரத்தில் ஒரு தற்கொலைக்காட்சி தயாரிக்கப்பட்ட இடத்திற்கு அருகே இடிக்கப்பட்ட ஒரு கிணறு

# ஒரு மாசக் குழந்தை

(All Rights Reserved.)

---

ஆம்,—அதுதான் என் பெயர். ஒருமாசக் குழந்தை. இந்தப் பெயர் தான் எனக்குச் சரி. எனக்கு நானே இந்தப் பெயரை வைத்துக்கொண்டேன். நான் ஒரு மானிடக் குழந்தை. எனக்குப் பெயர் வைக்கவுமில்லை; நாமகரணம் செய்யவுமில்லை. நான் பிறப்பதற்கு முன்பே ஒரு பேச்சு நடந்திருந்ததாம். என் தாயாரின் அன்னை ஒரு வருஷத்திற்கு முன்பு தான் கடவுள் பத மடைந்தனராம். அது திடீரென்று நேர்ந்த சம்பவமாம். அந்த ஏமாற்றம் தாளா முடியாததாகி, எனது பாட்டிமார்கள் இனி பிறக்கும் குழந்தைக்கு என் தாயாருடைய அன்னையின் பெயரை வைக்கிறதென்று முடிவுகட்டி யிருந்தனராம். அந்தப் பெயர் "எதிராஜா" என்பது. அதை எனக்கு வைக்க எல்லோருக்கும் இஷ்டமாம். இந்த யோசனைகள் உன்னத முடையதே. என் பாட்டியின் பெயரை நான் அடைவது எனக்கு வெகு சந்தோஷமே—கௌரவமே. என் பாட்டி மீது வைத்த அவ்வளவு பிரேமையையும் என் பேரில் வைப்பார்களல்லவா? சிறு குழந்தையிலேயே பாட்டியின் பெரிய ஸ்தானத்தை நான் வகிப்பதென்றால்—அது எவ்வளவு பெரிய ஸந்தோஷம்! ஆனால் நான் அதற்குக் கொடுத்து வைக்கவில்லை. எதிராஜா என்று நாலு பெயருக்கு முன் என்னை அழைக்கவுமில்லை. அந்தப் பாக்கியத்தை நான் பெறவுமில்லை. என் பூவுலக வாசமே முப்பது நாட்கள் தான்,—சரியாக 30-தான்,—அவ்வளவு தான் என் ஜீவித காலம்! கடவுள் எனக்கு வைத்த ஆயுட்பாகமும் அவ்வளவே.

என் கதை ஒரு கண்ணீர்! கல்லு முருகும், புல்லு முருகும். என் கதையை நானே சொல்கிறேன். இக்கதையைச் சொல்லும் நான் இப்போது இவ்வுலகில் இல்லை,—உள்ளபடியே இல்லை தான். யாரையாவது கேட்டுப் பாருங்கள். என் அழகிய மிருதுமயமான என் தேகம் அந்தப் பாழ்த்த மண்ணிலே கிடத்தப்பட்ட அலங் கோலம் அனைவருமே சொல்லுவார். என் பிரியமான தாய்—என்னைப் பெற்ற தாய் இன்னும் அழுது கொண்டிருக்கிறார். உள் மனதுக்குள்ளாகவே பெரிய ஆசை வைத்திருந்த என் தந்தை,—என் வதனத்தை மிக்க ஆர்வத்துடனும் உற்றுப்பார்க்கும் பெரிய தாகம் நிறைந்த என் எந்தை,—இன்னும் உள்ளுக்குள்ளாகவே உருகி நிற்கிறார். என் இரு பாட்டிமார்களும் படும் வாதனையும் ஏமாற்றமும் சொல்லொணாது. உள்ளபடியே நான் இறந்துபோன குழந்தை தான். ஆம்,—பூவுலகின் வாசம் துறந்து, வானவொளியில்—ஜெகஜ் ஜோதியில் கலந்து போனேன்!

*
* *

என் தாயின் கர்ப்பத்தில் நான் பட்ட பாடுகள் அனந்தம். அதை சாஸ்திர வல்லுநர் ஏற்கெனவே நூல்களில் பரக்கத் தீட்டியுள்ளார். தன் வயிற்றில் என் இருப்பினது அசைவை என் தாய் கண்டதும் கொண்ட பூரிப்பை அளவிட எவர் தரமுமல்ல. அதை அந்த விதம் அநுபவித்தவர்கள்தாம் உணரவல்லார். பெண் ஜன்மமாகிய புண் ஜென்மம் வேண்டாமென்றும், ஆண் மகவாய் இருக்க வேண்டுமென்றும் என் தாய் தனக்குள் சொல்லிக்கொண்டார். நான் என் சிறு செவி சாய்த்து அதை உற்றுக் கேட்டேன். சிறிது புன்னகை நிரம்பினேன். சிரித்துக்கொண்டேன். ஏனெனில் என் தேக பக்குவம் பெண் மகவுக்கான வகையில் இருந்தது. நான் பெண் குழந்தை! அதை என் தாய்க்குச் சொல்லி விடலாமென்று நினைத்தேன். எப்படிச் சொல்வது? ஒரு பெரிய சிறையினுள்ளன்றோ பிணிக்கப்பட்டுள்ளேன்? காலத்தை எதிர் நோக்கியிருந்தேன். என் அவயவராசிகள் நாளுக்கு நாள் வளர்ச்சி பெற்று வந்தன.

*
* *

என் தந்தை சென்னை சென்று திரும்புகையில் ரயில் வண்டியுடன் விழுந்து விட்டதாய் ஒரு பிரஸ்தாபம் உண்டானது. அப்போது வீட்டில் நேர்ந்த குழப்பம் சொல்லி முடியாது. நான் பூர்வ ஞானத்துடன் இருந்ததால் என் தந்தை விபத்திலிருந்தும் தப்பியது எனக்குத் தெரியும். அதை எவ்வாறு வெளியிடுவது? என் தாயோ ஆத்மஹத்தியம் செய்துகொள்ள எண்ணி விட்டார்,

ஆ! கர்ப்ப வாஸத்தினுள்ளேயே நமக்கு மரணம் பிராப்தமா என்று கலங்கினேன்! பிறகு யாவும் சுபமாக முடிந்தது.

* * *

என் தாயின் வயது பதினாறு. இதுகாறும் மயக்கம் அவருக்கு வந்தது இல்லை. அன்றொரு நாள் காலையில் மணி ஒன்பது இருக்கும். பூஜை செய்து கொண்டிருந்த என் மாதா திடீரென்று பூமியில் மூர்ச்சிதையாய் விழுந்தனர். அன்று வந்த மயக்கம் பிரதி தினத்திலும் பலமுறை தோன்றும் தன்மையில் முடிந்தது. அடிக்கடி அது வந்து கொண்டே இருந்தது. இதன் மத்தியில் என் தந்தையின் நேயரொருவர் காலமாகி விட்டார். அது சென்னை என்ற நகரில் நேர்ந்தது. அங்கு ஒரு பத்திரிகா காரியஸ்தலம் உண்டு. அதைக் கவனிக்கும் பொறுப்பு என் தந்தைமேற் சாய்ந்தது. சென்னைக்கும் ஸ்ரீரங்கத்துக்குமான அலைச்சல் அதிகமாயிற்று. ஒவ்வோர் சமயங்களில் என் தாய் மயக்கமாய்க் கிடக்க, அதையும் சகித்து சென்னை செல்ல நேரும். பலமுறை என் மாதாவுக்கு நித்திய கண்டம் பூரணாயுசாக இருந்தது. என் தாயின் தந்தையார் இங்கிலீஷ் மருந்து சாப்பிடும்படி வற்புறுத்துவார். எங்கு என் தாய் சாப்பிடச் சம்மதித்துவிடுமோ என்று எனக்குப் பெரிய ஏக்கம்! அந்தப் பாழும் சோடாவை என் மாதா பருகும் ஒவ்வொரு சமயமும் எனக்கு வெகு துன்பம். அதில் நிறைந்துள்ள கரியமிலவாயு என் நேத்திரங்களில் தாக்கி எனக்கு மிக்க வேதனை விளைக்கும். சில சமயங்களில் உஷ்ணமும் இறுக்கமும் தாங்காமல் நான் என் மாதாவின் நெஞ்சுக் கருகே வந்து விடுவதுமுண்டு. அப்போது என் தாய்க்குப் பிராணாபத்து தான். நான் என் மனதறிந்து இப்படிச் செய்யவில்லை. என்னை வாட்டி வருத்தும் அந்த ஜடாக்கினி செய்யும் வேலை. என் தாய்க்கு மயக்கம் வருகிற சமயமெல்லாம் பல்லும் கிட்டிக்கொள்ளும். மயக்கம் தீர்ந்த பிறகு கூட பற்கிட்டுதல் அப்படியே இருந்து விட்டதும் உண்டு. கொறடு கொண்டு பற்கிட்டியிருப்பதை எடுக்கப் பார்த்த சமயமும் பல. ஒரு நாள் நாக்கு உள்ளுக்குள் இழுத்துக்கொண்டது. பேச முடியாது தாய் தவித்தார். ஓர் பொழுது என் பிரிய தாய் வாய் திறந்தவாறு அப்படியே பல நிமிஷம் ஸ்வாஸம் உள்ளடங்கி நின்று விட்டார். யாவரும் அழுது விட்டனர். பிறகு போன பிராணன் திரும்பிற்று.

* * *

என் தாயின் அன்னை மிக்க புண்யவதி. புண்பட்ட புனிதவதி என்றாலும் தகும். அந்த அம்மை என் தாயின் கனவிலே சில தீர்க்கதரிசனங்கள் சாதித்தனராம். ஒரு வாரம் வரை மயக்கம் வராது, பிறகு ஒருநாள் நேரும், பிறகு பிரஸவ காலம் வரை இரா. குழந்

தை—அதாவது நான் பிறந்ததும் தோன்றும். இடையில் தேள் கொட்டுதலும் வாய்க்கும் என்றனராம். இவ்வண்ணமே யாவும் நிகழ்ந்தன. தேளொன்று காலிலும் கரத்திலுமாக மூன்றிடங் களிற் றீண்டியது. என் தாய் பட்டபாடு பரமனே யறிவார். நான் வயிற்றினுள் இருந்தவாறே கண்ணீர் சொரிந்தேன். பிறகு எலிக் கடியும் இருமுறை நேர்ந்தது. உள்ளுக்கு அவிழ்தம் உண்ணவோ—நான் ஒருத்தி உள்ளிருப்பதால்—அது எனக்குத் தீமை பயக்கு மாதலின்—அது முடியாததாயிற்று.

*
* *

என் தந்தையின் தாயாருக்கு—சித்திரை மாதம் சென்று விட வேண்டுமென்று பெரிய எண்ணம். நான் ஆண்மகவு—என்று அவர் சிந்தனை. சித்திரையிற் செல்வன் பிறந்தால் அர்த்த குடிக்கு அனர்த்தம்—என்பதும் பழமொழியாம். "அவரவர் விதிவழி யடைய நின்றனரே" என்ற பாசுர வாசகம் தான் உண்மை. மற்றதெல் லாம் வீண் பிரமை. ஆயினும், லோகாநுபவத்தையும் தள்ளலா காது தான்.

*
* *

சித்திரை மாதம் 12-ம் தேதி யன்று காலைப்பொழுது உல் லாஸமாகக் கழிந்தது. என் கண்ணனைய தாயார் கடையில் சில சிற்றுண்டிகளை வாங்கி வரச்செய்து, மனோகரமாகத் தின்று கொண்டு மகிழ்ச்சியி லிருந்தார்கள். பாழும் வேளை நெருங்கிற்றோ யாதோ! ஏதோ காரியமாய் எழுந்து பின் கட்டிற்குச் செல்ல, பெரிய தேளொன்று எங்கிருந்தோ வந்து கொட்டிற்று. உபத்திர வம் தாங்க முடியவில்லை. அத்துடன் பிரஸவ வேதனையும் பிராப்த மானது. எனது தந்தையின் மெல்லிய ஹிருதயம் தத்தளிப்பில் இருந்தது. இரவு 7-மணி 38 நிமிஷத்திற்கு நான் பூவுலகத்தின் தரிசனம் பெற்றேன். மறு நிமிஷமே என் தாய் முந்திய தீர்க்கதரி சனப்படி மூர்ச்சிதையானார். பிறகு தெளிவு எய்தினர். இரவு பொழுதும் கழிந்தது.

*
* *

மறுநாட் காலையில் அனைவருக்கும் என் தந்தையின் தாயார் கற்கண்டுடன் தாம்பூலம் வழங்கினர். "பெண் குழந்தையாகப் பிறந்தது—பிறருக்கு இன்னும் உட்படத்தானே வேண்டும்" என்ற னர். ஆண் மகவாயின் எல்லா அதிகாரமும் செய்யலாம் என்றார். என் தாயின் தம்பி பாஷியத்திற்கு வயது பத்து. பாஷியத்துக்குத் தான் என்னைத் தரவேண்டுமென்றனர். எனக்குள் நாணகச் சிரித் துக் கொண்டேன். பிறந்த வீட்டிலேயே என்னை மாலையிட ஒரு

மாமன் இருக்கிறாரா என்று பூரித்தேன்: ஆனால், இவ்விதம் சிறு போதில் தானே பெரியோர்கள் இன்னாருக்கு இன்னார் மனைவி, கணவன்—என்று பிரஸ்தாபிப்பதில்—இதுவெல்லாம் பிற்காலத்தில் நிறைவேறி விடுகிறதில்லை. எவ்வளவோ இடங்களில் இவ்விதமான நிச்சயிப்புகள் தவறிப்போய், பிராப்தம் போல அவரவர் விதி யமைப்பின்படி வெவ்வேறிடத்தில் விவாகங்கள் நிகழ்ந்து விட்டிருக்கின்றன. உலக அநுபவமும் இதற்குப் போதிய சான்றாகும். நிற்க, மணி பத்தாயிற்று. என் தாயின் தந்தையார் என்னைப்பற்றி ஜாதகம் ஒன்று கணித்து வந்து என் பிதாவின் மேஜையில் வைத்தார். அந்த சமயம் என் தந்தை முந்திய நாவலொன்றை ஒழுங்கு படுத்துதற்காக, அந்த எழுத்துப் பிரதியைப் படித்துக்கொண்டிருந்தார். ஜாதகத்தை என் தந்தை கவனித்ததும் நெஞ்சு பகீர் என்றது. புத்தி எதிலும் செல்லவில்லை. நாவல் கட்டை எடுத்துப் பீரோவில் வைத்துவிட்டு வெஞ்சல வதனராய் ஆலோசனையிலிருந்தார்.

* * *

அந்த என் ஜாதகம் இதுதான்:—

பிங்கள வருஷம் சித்திரை மாதம் 12-ம் தேதி (24-4-17) செவ்வாய்க்கிழமை உதயாதி நாழிகை 34-க்கு, விருச்சிக லக்கினம் ரோகணி நக்ஷத்திரம் 3-ம் பாதத்தில் ஜனனம். சந்திர திசை நடப்பு. 13-மாதம் பாலாரிஷ்டம் 48-நாள் போகவேணும். மாதாவுக்கு ஒன்றுமில்லை. சீதளத்தால் உபாதை உண்டாகி விலகும்.

| | | | |
|---|---|---|---|
| செ. | சு. பு. சு. வி. | சந் | கே. சனி. |
| | இராசி. | | |
| | | | |
| ரு. | ல. | | |

எனது தந்தை தமது தாயாரிடத்தில் ஜாதக பலன் இப்படியிருக்கிறதே என்று திகைப்புடன் வாசித்துக் காண்பித்தார். அந்தப் பாட்டியும் உள்ளுக்குள் மிக்க வேதனை யடைந்தார். பிராப்தம் இருந்தால் விடாது என்றார். எத்தனையோ ஜாதகங்கள் பொய்த்து விடுகின்றன; குழந்தை பிறந்ததை வெளியில் வந்து

சொல்ல அதிக நேரமாய் விட்டது; மணிக் கணக்கு அவ்வளவு சரியிராது; ஜாதகம் கிரமமாய் சரியானதாகாது என்றார். என் தந்தைக்கு மட்டும் திகில் திகில்தான். எங்கு என் தாய்க்கு இது தெரிந்து விடுகிறதோ என்ற ஏக்கமும் கூட.

*
* *

எனது தாயார் இந்த ஜாதகத்தை நம்பவேயில்லை. குழந்தை 60, 70 வயது இருக்கும் என்றார். என் தந்தையின் தாயாருடைய மாதாவைப்போல் நெடுநாட் ஜீவியம் கொண்டது என்றார். என் தாயாருக்கு என் ஜாதகப்படி சீதளத்தால் உபாதை யுண்டாகவேயில்லை. இதனாலும் என் ஜாதகம் பொய்த்து விடுமென்று என் தந்தை முற்றிலும் நம்பினார். என் தாயாருடைய பிதா மட்டும் என் விஷயத்தில் மிக்க அலக்ஷிய சுபாவமாயிருந்தார். குழந்தை பிழைக்காது என்று அவருக்கு நிச்சயமாயிருந்தது போலும். என் தந்தைக்கு சிற்றப்பனொருவர் உண்டு. அவருக்கும் என்னிடம் மிக்க அலக்ஷியம். என் ஜாதகப்படி உண்மையாய் நடந்துவிடக் கூடாதா என்றே அவருக்கு ஆசை. அது அவர் ஜென்மத்தோடு பிறந்த குணம். அவர் ஒரு பெரிய விஸ்வாசக் கொக்கு!

*
* *

என் தந்தையின் தாயாரது மாதா—என்று நான் சொல்வது நீண்ட வாசகமாயிருக்கிறது. ஆதலின் அந்த அம்மையை பெரிய பாட்டி என்று குறிப்பிடுகிறேன். என் தந்தையின் தாயை பாட்டி, என்று மட்டும் சொல்லிச் செல்கிறேன். பெரிய பாட்டி தான் எல்லோரையும் வளர்த்தவர். தனது பேரனை என் தந்தைக்கு எப்போது மகவு பிறக்கும் என்று ஆசையோடும் காத்திருந்தவர். ஆதலின் என்னைத் தன் இருகரத்தேந்தி, இரவு பகல் என்மீதே சிந்தையாய் இருந்தார். வீட்டில் எலிகள் அதிகம். எங்கு என் மீது விழுந்து விடுகிறதோ என்று அது ஒரு விசாரம். ஒரு பூனையும் வீட்டில் உண்டு. என்னை ஒரு சமயம் அது கடித்து விடுமோவென்ற பயமும் வேறே! பெரிய பாட்டி எவரையும் நம்பமாட்டார். தன் கையிலேயே என்னைத் தாங்கி நின்றார்.

*
* *

நான் பிறந்த மறுநாள் எனது வதனத்தைக் காண என் தந்தை ஜாடையாக எட்டி எட்டிப் பார்த்தார். அவர் ஜெபம் சாயவில்லை. இரண்டாம் நாள் என்னை அறையிலிருந்து வெளியில் கொண்டு வந்தபோது என் தந்தை மௌனக் குறிப்புடனும் என் முகத்தைச் செவ்வனே நோக்கினார். மனதிற்குள் தாமே மகிழ்ச்சி குலாவினார். என் தந்தையின் மாற்றாந்தாய் என்னைப் பார்க்க வந்த

வள், என் செவிகளைப்பார்த்து—இவ்வளவு பெரிதாயிருக்கிறதே—தீர்க்காயுசுக்கு இது அறிகுறியாயிற்றே என்றாள். அது நல்ல நெஞ்சுடன் கூறிய வாசகமல்ல. குழந்தையும் பிறந்ததா என்ற எண்ணத்தின் கூற்று அது. தான் இன்றி, பிரஸவ முதலிய ஸகலமும் நடந்து விட்டதே என்ற உக்கிரக சிந்தையும் ஒரு சார்! என்னே பொறாமை யுலகம்!

* * *

நான் பிறந்தபோது வெகு புஷ்டியான ஆகிரதியுடனும் இருந்தேனாம். இப்போது இளைத்துப் போனேனாம். இது இரண்டாம் நாள் என் பாட்டியார் கூறிய வாக்கு. நான் வெகு உல்லாஸமாய் பூவுலகத்தின் காற்றை ஸ்பரிசித்துக்கொண்டு ஆநந்த மயமான நித்திரையில் ஸஞ்சாரம் செய்து கொண்டிருந்தேன். மூன்றாம் நாள் எனக்கு ஜ்வரம் அணுகியது. சிறு சிறு தும்மலும் உண்டாயது. வைசூரியும் வார்த்தது. என் மிருதுமயமான தேகத்தில் பெரிய பெரிய கொப்புளங்கள் தோன்றின. நான் மிக்க வாதனை யுற்று அப்படியே கிடந்தேன்.

* * *

இதற்கு முன்னதாகவே என் தந்தை ஒரு சிறு தொட்டிலை, தமது கைபடக் கட்டினார். வீட்டில் தொட்டில் ஒன்று சுந்தரசதுடன் தோன்றியது நோக்கி மிக்கப் பூரித்தார். அத்தொட்டிலில் மூன்று நாள் கிடந்தேன். வைசூரியும் வாடிற்று. ஸ்நானமும் ஆயினது. மறுபடியும் சிறு கொப்புளங்கள் வந்து தானாகவே அடங்கின. எனக்கு வைசூரி என்றபோதே என் தந்தை மனம் திடுக்கிட்டது. ஜாதக நினைப்பின் ஸஞ்சலம் அதிகமானது. என் பாட்டியார் உள்ளுக்குள் வேதனை யடைந்தார். பிறகு நான் தேறி எழுந்த பின்பு, என் பாட்டியார் குழந்தை பிழைத்தது அருமை, இன்னொரு குழந்தையானால் பிழைக்காது என்றார்.

* * *

என் பிரிய தாயார் என்மேற் படிந்திருந்த கொப்புளங்களின் மாசுகளை யெல்லாம் போக்கினார். நான் முன்னிலும் அழகாக ஜ்வலித்தேன். எனக்கென்று ஒரு சிறு பாய், ஒரு சிறு சயனம்—ஒரு இடம். என் பக்கத்தில் என் தாயார் ஸயனித்துக்கொள்வார். வெகு இன்பமாய்ப் பால் அருந்தி மனோகரமாயிருந்தேன். என் சின்னஞ் சிறு கால்களை உயரத் தூக்கினபடியே இருப்பேன். பசுவின் பாலும் எனக்குப் புகட்டுவார்கள். அதைப் பருகியதும் களைப்பால் தாயின் மடியில் உறங்கி விடுவேன். என் சுக நித்திரை யறிந்து என்னைத் தொட்டிலிட்டு ஆட்டுவார்; அல்லது என் சிறு படுக்கையில் தூங்குவேன்.

என் தந்தை பீரோவைத் திறக்க வெகு மெதுவாக வருவார். எங்கு சப்தம் உண்டாகிறதோ—என் தூக்கம் கலைந்து விடுமோ—என்று வெகுவாய்ப் பயந்தவர், வெகு மெதுவாகப் பேசுவார். தும்மலோ இருமலோ நேரின் வெகு தூரம் போய் அந்த சப்தம் எனக்குக் கேட்காதபடி இருக்கப் பார்ப்பார். அந்த சிறு சப்தம் கூட எனக்குக் கேட்டு விடும். உடனே நான் விழித்துக்கொள்வேன். என் சின்னஞ்சிறு வாய் திறந்து கூவுவேன். யாருமில்லாத இவ்வித சமயங்களில் என் தந்தை தொட்டிலாட்டுவார். நான் படுக்கையிலிருந்தால் தமது கையைத் தட்டி சமாதானம் செய்விப்பார். அதற்கெல்லாம் நான் ஒப்பாது கூவினால் உடனே என் தாயாரை அழைப்பார்.

*
* *

என் சப்தம் கேட்டதும் என் தாயார் ஓடிவந்து விடுவார். என் அருகே சயனித்துப் பால் தர வருவார். அதற்குள் என் ஆத்திரம் அதிகம். என் சிறு வாயை ஆ-ஆ-என்று திறந்து கூவுவேன். பால் குடித்தபடியே உறங்கி விடுவேன். இரவெல்லாம் பெரிய பாட்டியும் தாயாரும் எனக்காகக் கண் விழித்திருப்பார்கள். நான் பாலுக்காக அழுகையில் என் தலை மயிரை என் கையில் பிடித்து இழுத்துக்கோண்டு கூவுவேன். அது பார்க்க வெகு அழகாயிருக்குமாம். ஒரு தினம் நான் என் தலைமயிரைப் பிடித்திழுக்கப் போகையில், என் தந்தை தமது கைவிரலை என் விரல்களின் இடையே வைக்க, அதையே தலை ரோமமென்றெண்ணி நான் உறுதியாகப் பிடித்து ஆட்டிக்கொண்டு அழுதேன். அது மிக்க விநோதமானதாம். என்னை ஸதா கையிலேயே வைத்திருக்கவேண்டும். மடியிலேதான் நர்ன் கண்வளர்வேன். கீழே படுக்க வைத்தால்,—ஏதோ தூங்கியிருந்தால் மட்டும் போச்சுது,—இல்லையாகில் உடனே கூவுவேன். தொட்டிலிட்டு ஆட்டினாலும் இலகுவில் தூங்கி விடுவேனோ—ஒருபோதுமில்லை. கண் விழித்தபடியே என் சிறு கால்களை உதைத்துக்கொண்டு இருப்பேன். தொட்டிலின் அசைவு மெதுவாகி விட்டால் உடனே கூவுவேன். எல்லோரும் ஓடி வந்து விடுவார்கள். என் சப்தம் ஒன்று போதும் ஐந்து ராஜ்யங்களை ஜெயிக்க.

*
* *

பால் எவ்வளவு வேண்டுமானாலும் பருகுவேன். பசுவின் பால் பருகிய பின்பு, ஒரு சிறு நித்திரை புரிந்து விட்டு பிறகு மாதாவிடமும் பருகுவேன். எனக்கு இதைவிட வேறு வேலை யென்ன? வேண்டியதற்கு மிஞ்சியே பருகுவேன். சில சமயங்களில் பாலைக் கக்கியும் விடுவேன். என்ன கக்கினாலும் பாலில் எனக்கு வெகு

ஆசை. பாலில் சக்கரை போட்டால் தான் குடிப்பேன். இல்லை யாகில் உடனே அழுவேன். சக்கரையோ, தேனோ எதாகிலும் என் சிறு வாயிலிட்டால் வெகு ஒய்யாரமாக நன்றாய்ச் சப்பிச் சப்பி சுவை பார்ப்பேன். அது ஒரு அழகான காட்சியாம்.

* * *

நான் எப்பொழுதுமே ஒரு பக்கமாகக் கிடப்பதில்லை. நான் பிறந்ததும் ஒரு பலகையில் படுக்க வைத்தனர். அப்போதே என் உடலை அசைத்து அசைத்துப் பலகையைத் தாண்டி வந்து விட்டேன். இப்படி வரப் பார்ப்பதில் எனக்கு அதிக ஆசை—அதுவே வேலை. என் தாயின் அருகே சயனித்தாலும் ஒருகைப் புறமாய் சயனிக்க எவ்விதத்திலும் புரண்டு கொள்வேன். தொட்டிலி லிட்டாலுமென்ன.—அங்கும் இப்படியே புரள்வேன். ஒரு ஓரத்தில் குப்புறக் கிடப்பேன். அது மட்டுமல்ல—புழுவைப்போல் என் உடலை நெளித்து நெளித்து கொஞ்சம் கொஞ்சமாகத் தொட்டிலை விட்டு வெளிவந்து நிலத்தில் விழுவேன். ஒரு தினம் அப்படி விழுந்து நல்ல அடிபட்டேனானாலும் பேசாமல் தொட்டிலுக்கருகே கிடந்தேன். என் தந்தை வந்து திடுக்கிட்டுக் கூவ, உடனே என் காவலர்களான தாயார், பாட்டியார், பெரிய பாட்டியார்—எல்லோருமே ஓடிவந்து விட்டார்கள். இன்னும் இரண்டு மாதம் போனால் நான் "தளர் நடை" நடப்பேனென்று என் தாயார் சொல்லுவார். நான் நடந்து நாற்புறமும் செல்ல இடமும் மிக்க விஸ்தாரமே. "குழவி தளர் நடையைக் காண்டலினிதே" என்றனர் பெரியோரும்.

* * *

நான் என் பசியாலோ, பாலின் வெறியாலோ, என் தாய் அருகிலின்மை கருதியோ நான் கஷ்டப்பட்டு அழ, என் தாய் அந்த அழுகையை ஒரு இனிய ராகமாக எண்ணி வேடிக்கை பார்ப்பது—எனக்கு வெகு கோபத்தை யுண்டுபண்ணும். உடனே என் தாயை அதட்டும் மாதிரியில்—பலமாகக் கூவுவேன்—என் அழுகையை இன்னும் அதிகப்படுத்துவேன். உடனே என்னை சமாதானம் செய்யப் பிரயத்தனங்கள் தொடங்கி விடும்.

* * *

என் பாட்டியார் ரகசியமாக எனக்கென்று நகைகளை ஆசையுடன் செய்தார். என் காலுக்குக் காப்பும், என் கைகளுக்குப் பொன்காப்பும் இட்டார். என் அழகு அதிகமாயிற்று. ஆயிரம் நகைகள் போட்டதுபோல் எடுத்துக் காட்டிற்று. முத்து சரத்தில் பொன்காசொன்று வைத்துக் கட்டி என் கழுத்திலிட்டனர். அது மார்புக்கு மிக்க எழிலை யுண்டுபண்ணிற்று. வெகு சிங்காரம் தர்

தது. என் பாட்டியார் உடல் பூரித்தார். என் தாயும் தந்தையும் புளகாங்கித மெய்தினர்.

*
* *

ஒரு நாள் என்னருமைத் தாய் மல்லிகைப் பூச்செண்டொன்றை எனக்கு சிரசின் ஒரு பக்கமாக வைத்து, என் தந்தையை அழைத்து சைனு தேசத்து லேடிபோல் இருக்கிறேன் என்று சொல்லி ஆநந்திதையானுர். பிதாவும் பரவச மெய்தினுர்.

*
* *

நான் பருகுவதற்காக என் தந்தை ஒரு கெண்டிலோட்டா வாங்கி வந்தார். என் சிறு வயிறு கொள்ளும்படியான பாலையே அது கொள்ளும். அதற்கு ஒரு ரப்பர் உறை வாங்கி அதில் மாட்டி அதில் பாலை யூற்றித் தந்தனர். மிக்க சொகுஸாக உறிஞ்சி உறிஞ்சிக் குடித்தேன். இரண்டு தினங்களுக்குப் பிறகு ரப்பர் உறையை எலி கடித்து விட்டது. என் தந்தை வேறொன்றும் வாங்கி வந்து சரி செய்தார்.

*
* *

என் தந்தைக்கு ஒரு தமக்கை சென்னையில் உண்டு. அவர்களெல்லாம் என்னைப் பார்க்க வந்து சேர்ந்தனர். என் தாயாருக்கு மயக்கம் அடிக்கடி வந்து கொண்டிருந்தது. எனக்குப் பால் கொடுத்தபடியும், என்னை மடியில் வைத்திருந்தபடியும், அப்படியே மயக்கமாய் விழுந்து விடுவதுண்டு. அந்த சமயம் பெரிய பாட்டி ஓடிவந்து என்னைத் தூக்கிக் கொள்வார்கள். சென்னைத் தமக்கை முதலியவர்கள் வந்தபோது என் தாயார் என்னை வைத்துக்கொண்டிருந்த நிலைமையிலேயே அப்படியே மயக்கமாய் விழுந்து விட்டனர்!

*
* *

என் பிதாவின் சென்னைத் தமக்கை எனக்கு சிறு பாட்டி முறையல்லவா? அவர்கள் என் முத்துச் சரத்தை எடுத்து விட்டு பவள சரத்தில் அந்தப் பொன் காசைக் கட்டினர். பிறகு ஸ்வர்ணமயமான சிறு சிறு மணிகளில் கோர்த்து அதில் அந்த காசைச் சேர்த்து எனக் கிட்டனர். அது மிக்க லாவண்யமாயிருந்தது. இங்ஙனமாக நாளொரு மேனியும் பொழுதொரு வண்ணமுமாக நான் வளர்வதானேன்.

*
* *

எனக்கு ஸ்நானம் செய்வித்து மஞ்சள் பூசி நீராட்டுவிப்பார்கள். அப்போது என் கேச ராசிகள் சுருள் சுருளாய் வெவ்வேருக நின்று மிக்க கண் கவர் வனப்பினை யுண்டுபண்ணும். எனக்குத்

தலை சீவி முடித்து ஜடையும் என் தாயார் போட்டனர். பூ முடித்து அழகு பார்க்கவும் அன்னைக்கு ஆசை. கண் திருஷ்டி படுமென்று பாட்டியார் வேண்டாமென்றனர். என் புருவங்களில் மையிட்டு, கண்களிலும் மைதீட்டி, நெற்றியில் சாந்துப் பொட்டிட்டு என் தாய் சிங்காரம் செய்வார். அப்போது நான் மிக்க ரூப சோபிதத்துடனும் விளங்குவேன்.

* * *

என் தந்தைக்கு ஸதா என்னைக் கவனித்து வருவதே பெரிய உத்தியோகம்! இதற்குத் தான் தமது உத்தியோகத்தையும் விட்டு விட்டு வந்தார் போலும்! நான் பூவுலக வாஸம் செய்த அந்த முப்பது நாளும் என்னைச் சுற்றிச் சுற்றி வட்ட மிட்டுக் கொண்டிருந்தார். என் கைகளையும் கால்களையும் மெதுவாகத் தொட்டுப் பார்ப்பார். எனக்கு மெதுவாக விசிறுவார். என் தேகத்தில் தமது கைகளை வைத்துப் பார்ப்பார். "மக்கள் மெய்தீண்டல் உடற்கின்பம்" என்பது உண்மைதான் என்று மனோராஜ்யம் செய்வார். என் அழுகை என் தந்தைக்கு ஒரு கந்தர்வகானம்போல—'பிகில்' சப்தம் மாதிரி யிருக்குமாம். எனது தூக்கத்தில் அவர் என்னை பிரேமையுடனும் உற்றுப் பார்ப்பார். என்னைத் தூக்கிக்கொள்ள அவருக்கு ஆசை! ஆனால் தூக்கத் தெரியாது. எனக்கு என் கழுத்து நிற்காதல்லவா? சிலநாட் குழந்தைதானே நான்! அதற்குத் தக்கபடி என்னைத் தூக்கி எடுத்துக்கொள்ளும் விதம் என் தந்தை அறியார். மேலும் எடுத்தால் எங்கு சுளித்துக்கொள்ளுமோ என்னவோ வென்றும் அவருக்குப் பயம். அல்லாமலும்—ஆ! அவ்வளவு ஆசையா—என்று பிறர் பழிப்பார்களென்ற நாணமும் அச்சமும் அவருக்கு அதிகம். ஒரு நாள் ஒரு பெரிய இட்டிலியை என் வாயில் வைத்து எடுத்துக்கொண்டார். எனக்கு அப்பொழுதே அதைத் தின்ன ஆசை. ஆனால் எனக்குப் பல் இல்லையே!

* * *

நான் சிரிப்பது உண்டா என்று என் தந்தை கேட்டார். நான் தூங்கும் சமயத்தில் புன்னகை புரிவதை என் தாய் அவருக்குக் காட்டினர். அன்று தொட்டு நான் புன்னகை ததும்பி நிற்கும் சமயம் எதுவோ வெனக் காத்திருப்பது என் தந்தையின்

வழக்கம். தாம் மேஜையின்மீது கை வைத்து பத்திரிகைக்கு விஷயங்கள் எழுதும்போது, நான் அருகே மனோகரமாக உட்கார்ந்து கொண்டிருந்தால், அந்த உற்சாகத்தில் விஷயங்களை இன்னும் வெகு நேர்த்தியுடனும் அமைத்துச் செல்லலாம் என்று என் பிதா கருதுவார்.

* * *

நான் பிறந்ததற்காகச் செய்யும் புண்யாசனம் இன்னும் நடக்கவில்லை. என் தாயின் தந்தையார் வெளியிடங்கட்குச் சென்றிருந்தது ஒரு காரணம். என் மாதாவுக்குத் தேக சுகமில்லாதது ஒரு மூகாந்தரம்.—இப்படியே பல தடைகள் வந்தன. நாட்களும் அநேகம் சென்று விட்டன. கடைசியில் நாள் பார்த்தனர். மே-மாதம் 24-ம் தேதி புதன்கிழமை நல்ல நாளாகத் தெரிந்தெடுத்தனர். உள்ளூர் உறவினர்க்கும் தெரிவித்தனர். இத்த நல்ல நாள் ராமபிரானுக்கு மகுடாபிஷேகம் குறித்த முகூர்த்தம் போல முடிந்து விட்டது. அந்தக் கதை பிறகு சொல்கிறேன்.

* * *

எனது சென்னைப் பாட்டியார் எனக்கு இரு சொக்காய்கள் தைத்தனர். அது நாகரீகத் தைப்பு. இரண்டு எதற்காகவோ? ஒன்று மலினமானால் மற்றொன்று உபயோகிப்பதற்கோ—யாதோ! அந்த சொக்காய்களை எனக்கு இட்டுப்பார்த்தால் இன்னும் அதிக சௌந்தர்யமாய் விளங்குவேன். இன்னும் அதிக புஷ்டியுடனும் தோன்றுவேன். மிக்க சோபிதமாய் இருக்கும். அதற்கு யாருமே கொடுத்து வைத்திருக்கவில்லை! அந்த சொக்காய்களை நான் தரிக்கவுமில்லை. அதற்குள் என் வாணாள் பறந்து விட்டது. அந்த சொக்காய்கள் பீரோவிலேயே இருந்து விட்டன.

* * *

புண்யாசனத்தின்போது மேள சப்தம் முதலியன கேட்கும். பந்து ஜனங்கள் கூடுவார்கள். பல வகைப் பக்ஷணதிகள் தயாராகும். நான் அவற்றைப் புசியாவிட்டாலும் என் பெயர் சொல்லிக்கொண்டு மற்றவர்கள் உண்பது எனக்கு ஒரு சிலாக்கியம் தானே! அந்த தினத்தில் என் தாய்க்குத் தரவேண்டி என் பாட்டியார் சேலை முதலியது எடுத்து வைத்திருந்தனர். அந்தப்

படி நடந்திருந்தால் எவ்வளவு திருப்தியாய் சந்தோஷமாய் இருந்திருக்கும்? பிராப்தம் வேண்டுமே!

***

ஒரு நாள் என் தலை சீவி நெற்றியில் திலகமிட்டு, புருவங் கட்டும் கண்கட்டும் மைதீட்டி, வதனத்தில் பரிமளப் பவுடர் தூவி, சிறு படுக்கையில் என்னைக் கண் வளரவிட்டு யாவரும் என் அழகு நோக்கி மகிழ்ந்தனர். என் பிரிய தந்தையும் ஜாடையாக அந்தப் பக்கம் வந்து நேத்திரானந்த மெய்தினர். என் தந்தையின் மாற்றாந்தாய் அன்று பகல் வர நேர்ந்தது. அதற்குள் நகையா—இன்னும் நாள் சென்று போடலாமே என்றனர். என் கேசங்கள் மிக்க நீட்சியுடையது என்றனர். ஒவ்வொன்றாகத் தொட்டுப் பார்த்தனர். அன்று பொழுது மிக்க ஆநந்தமாகப் போயிற்று. அவ்வளவு தான் என் சுகவாழ்க்கை. அப்பொழுது பொட்ட கிராப் படம் பிடித்திருந்தால் மிக்க நன்றாக இருந்திருக்கும்.

***

அன்றிரவு ஜ்வரம் வந்து, விடாது அடித்தது. வயிற்றுப் போக்கும் பலமானது. தினத்துக்குப் பத்து விசை போனது. கோரோஜனை மாத்திரை தர, அது தினத்துக்கு முப்பது தடவையாய்ப் பேதியானது. வாந்தியும் ஒரு பக்கம். நான் இளைத்துப் போனேன். துரும்பாய் விட்டேன். என் ஸக்தி ஒடுங்கி விட்டது. என் அழகிய கன்னங்கள் ஒட்டிப்போயின. என் உலக ஆசைகள் பறந்தது. ஸதா அழுகை தான். அழக்கூட பலமில்லை. எனக்கு வலிப்பு உண்டாயிற்று. குடிக்கிற பால் தங்கவில்லை. வலிப்பின் உபாதையால் சுவாசம் இயல்பாக விட முடியாமல் மேல் மூச்சாகி மிக்க வாதனைப்பட்டேன். இரவு பகல் நித்திரையில்லை. என் கண்கள் திறந்தபடியே நின்று விட்டன. அதை ஆட்ட அசைக்கக் கூடவில்லை. அப்படியே நின்று விட்டது. தூக்கமே இடையாது. அழுதழுது சோர்ந்து சற்று நிற்பதும் பிறகு மறுபடி அழுவதுமானேன். எனக்குப் பேசும் திறமையேது? நானோ ஒரு மாசக் குழந்தை என் கஷ்டத்தை—நான் படும் வாதனையை—எப்படி வெளியில் எடுத்துச் சொல்வேன்.

***

என் பாட்டியார் பலரிடத்தும் இந்த எனது நோயைப்பற்றி விசாரித்தார். ஒரு ஜமீன்தார் வீட்டு அம்மாள், என்ன கண் அப்படியே நின்றுபோய் விட்டதா—அப்படியா—சரி—போயிற்று—

கண் நின்ற பிறகு—அந்தக் குழந்தை—நமக்கு ஏதம்மா ?—நமக்கு உதவாதம்மா—என்று கூறிற்றும். பிறகு தனக்குத் தெரிந்த ஒரு அம்மையையும் வீட்டிற்கு அனுப்புவதாகச் சொல்லிற்று. அன்று மாலை, எனக்குக் குடல் பிசகி யிருக்கலாமென்று ஒரு நாவித ஸ்திரீயை அழைத்து வந்தனர். அவள் ஒரு அவிவேக ஜந்து. என் கழுத்தையும் வயிற்றையும் பலமாக அழுத்தித் தேய்த்தாள். என் கால்களைப் பிடித்துக்கொண்டு என்னைத் தலை கீழாகத் தூக்கி ஆட்டினாள்! அப்போது நான் பட்ட வாதனையைச் சொல்ல எனக்கு வாயில்லையே! என் தாயார் தன் பெற்ற வயிறு கொதிக்க அய்யய்யோ என்று அலறினார். அந்த நாவித காதகியின் கையிலிருந்தும் பிறகு விடுபட்டேன்.

*
* *

ஜமீன்தார் வீட்டம்மாள் அனுப்பிய மாது மிக்க அநுபவசாலி. வந்து என்னைத் தூக்கி உற்றுப் பார்த்து விட்டு சோர்ந்த முகத்தோடு என்னைக் கொடுத்து விட்டார். இது ஜ்வரமல்ல, குடல் விழுந்ததுமல்ல, அவள் தலை கீழாகத் தூக்கி ஆட்டியதில் குடல் பிசகி விட்டிருக்கும். அப்படி செய்தது தவறு. இது தேக்கித்திக்கணை. இது குழந்தைகளுக்கு வரவே வராது. ஆயிரத்தில் ஒன்றுக்கு வரும். பிழைப்பதும் ஆயிரத்தில் ஒன்று தான். வர வர அதிகமாகும். குறையாது. ஐந்தாறு நாள் கெடுவு—தவணையுண்டு. அது போனால் தான் குழந்தை பிழைக்கும் என்றார். டாக்டரை யழைத்துக் காட்டலாமாவென, அது வீண்; அவர்களால் ஒன்றும் ஆகாது. சுக்குத் திராவகம் தான் கொடுப்பார்கள்; இரத்தம் இரத்தமாய்ப் போகும்; அது தான் பலன்—வேறில்லை. எந்த டாக்டராவது வரட்டுமே இந்த வலிப்பை இல்லாதபடி நிறுத்தி விட்டால் நான் பந்தயம் போடுகிறேன் என்றார். இராத்திரிக்கு இன்னும் அதிகமாகும். இது ஒருவித ஜன்னியில் சேர்ந்தது. இரவுக்கு வேறுவித இழுப்பு வரும். கைகளை இப்போதைவிட அதிகமாக இழுத்து இழுத்து ஆட்டும். தொண்டையில் கபம் கட்டிக் கொள்ளும். மல ஜலமும் போகாமல் கட்டி விடும் என்றார். பாட்டியார் கபம் ஒன்றுமில்லையே, மல ஜலம் தாராளமாகப் போகிறதே என, அதற்கு அந்த அம்மை இனிமேலே கபம் கட்டும் என்றனர். என்ன அம்மா இப்படிச் சொல்கிறீர்கள் என்றதற்கு—நான் என் செய்வேன், இந்தப் பாழும் நோயின் சங்கதி இப்படி என, அதற்குப் பாட்டி, பால் நன்றாகக் குடிக்கிறதே என, அதற்கென்னம்மா பால் வேண்டிய மட்டும் குடிக்கும்—அது ஒரு பெரிதல்ல என்று அந்த அம்மை கூற, அதற்குப் பாட்டி அப்படியானால் குழந்தை பிழைக்காதா வென . அதற்கு ஆயிரம் குழந்தைகளில் ஒன்று

பிழைக்கிறதுண்டு தான், அந்த ஆயிரத்திலே இது ஒன்ருக இருக்கட்டுமே என்றது. இப்போது வலிப்பு அவ்வளவு அதிகமில்லே, குறைவாயிருக்கிறது என்று பாட்டி சொல்ல, அதற்கு அந்த அம்மை குறைகிறது ஏதம்மா; இராத்திரிக்குப் பாருங்கள் ஜாஸ்தியாகிவிடும் என்று சொல்லிற்று.

*
* *

எனது ஜ்வரம் உள்ளடங்கின ஜ்வரம். வெளிக்குத் தோன்றுவதும் உள்ளடங்குவதுமாய் மாய்மாலம் செய்தது. நான் சுக வாழ்க்கையிலிருந்தபோது, என் தாய் முதலிய அனைவரும் என் ஜாதக பலனைப்பற்றி அடியோடு மறந்து விட்டிருந்தனர். நான் பெரிய பெண்ணுய் வளர்ந்து கிழவியாகி நீண்ட ஆயுளோடு நிலவுவேனென்று நம்பினுர்கள். இப்போது நான் பாயும் படுக்கையுமாகி விடவே ஜாதக பயம் அதிகமாயிற்று. அந்த அம்மையும் ஒரு சோதிட சித்தாந்தி போன்று இனி வருவதனைத்தும் கூறி விட்டாள். என் தாய் அழுதழுது சோர்ந்தார். ஒரு இரவில் நான் வலிப்பால் கைகளை ஆட்டியபடி மிக்க மோசமான நிலையினில் என் பாடு இருக்க, என் தாய் தனது மயக்கத்தாலல்ல,—தனது பெற்ற வயிற்றுக் கொதிப்பு சகியாது மயக்கமாய் மூர்ச்சித்து என் தந்தை மடியினில் சாய்ந்து விழ, வீடு அலங்கோலமாயிற்று. எனது தந்தையின் துயரம், என் பாட்டியின் மனக்கசப்பு, என் பெரிய பாட்டியின் சிந்தாகுலம், என் சென்னைப் பாட்டியின் மனேசஞ்சலம் யாரால் எடுத்துரைக்க இயலும்!

*
* *

சென்னைப் பாட்டி என்னைப் பார்த்து மகிழ வெகு தொலையிலிருந்து வந்தவர். சந்தோஷம் அநுபவிக்க ஸ்ரீரங்கம் ஓடி வந்தவர். அதற்காக எத்தனையோ தொல்லைகள் சுமந்து தாங்கியவர். வந்த இடத்திலும் துன்பமானுல், அதிலும் எனக்கே விபத்தானுல் அவர் இளநெஞ்சு என்ன பாடு பட்டதோ! என்னைத் தனது குமாரனுக்கு விவாகம் செய்விக்கவும் அவருக்கு ஆவலாம்.

*
* *

என் பாட்டியார் ஒரு கனு கண்டனராம். அப்போது அவர் வெளித் திண்ணையில் ஸயனித்திருந்தார். பெரிய பாட்டியார் என்னை மடியில் வைத்திருந்தது போலவும், கொஞ்சம் திரிசூரணம் கொண்டுவா, ஸ்வாமிகள் போகிருர்கள், அவர்களிடம் அமாவாஸை பிரதமை கழிந்ததும் கொடுத்தனுப்பி விடலாம்—என்று சொன்னது போலவும் சொற்பனம் கண்டு திடுக்கிட்டெழுந்து உள்ளே வந்து என்னைப் பார்த்தார். என் கண்கள் ஒரே இடத்தில்

அப்படியே நின்று போயிருக்கக் கண்டு கலங்கினர். அப்போது நின்ற கண்கள் அப்படியே இருந்து விட்டன. மரணத்திற்குப் பிறகும் கூட மாறவில்லை.

*
* *

என் தந்தைக்கு ஒரு குழந்தை பிறந்து, அதை வாரி எடுத்து உச்சி மோந்து முத்தமிட வேண்டுமென்று என் பாட்டிக்கும் பெரிய பாட்டிக்கும் நெடுநாள் தாகமாயிருந்தது. பெரிய ஆசையுடன் எதிர்பார்த்திருந்தனர். அத்தகையோருக்கு என் பிணி நிலைமை, அபாய நோய், புண்ணில் கோலிட்டது போலத்தானே இருக்கும்.

*
* *

காலைப் பொழுதாயிற்று. இரவு தொலைந்ததென்று அனைவருக்கும் ஒரு நிம்மதியானது. நானும் ஆயாசத்தால் அழ முடியாமல் அப்படியே கிடந்தேன். குணமாகி வருவதற்கு அது அடையாளமென நம்பினர். பகல் பொழுது போயிற்று. என் தாய் அழுதழுது சோர்ந்தார். மாலையில் என் தந்தைக்கு பக்கவலியும் மார்புநோயும் நேர அது சகிக்கத் திறனின்றி படுத்துவிட்டார் அதற்குப் பாட்டியார் ஒத்தடம்போட இதற்குள் இரவு சூழ்ந்தது என் நோய் அதிகமாயிற்று. வீறிட்டுக் கதற ஆரம்பித்தேன். பாட்டியார் குழந்தை அழ ஆரம்பித்து விட்டது என்றனர். பாட்டியும் தந்தையும் ஓடிவந்தனர். அப்போதே எனக்குக் கபம் கட்டி விட்டது. தொண்டை அடைத்துக்கொண்டது, அழ முடியாது போயிற்று. இழுப்பு ஜன்னியும் உண்டாகிவிட்டது. என் கைகளை இழுத்து இழுத்து ஆட்டி, அலங்கோல நிலையில் கிடந்தேன். காலை முதற்கொண்டே மலஜலம் கட்டிவிட்டது. வயிறு உப்புசம் கொண்டுவிட்டது. கல்லைப்போல் கெட்டியாகிவிட்டது. எண்ணெய் கொடுத்தனர் கோரோஜனை உரைத்துத் தந்தனர். பயனில்லை மலஜலம் இறங்கவில்லை. பெரிய பாட்டி தன் சேலையில் ஏதோ மலஜலம் விழுந்ததென்று தன் சேலை முழுவதையும் தேடிப் பார்த்தனர். கூட இருந்தவர்களும் பாட்டியின் சேலையைச் சோதித்தனர். ஒன்றுமில்லை. இரவு பத்து மணியாயிற்று. பன்னிரண்டும் அடித்தது. என் நிலைமை மிக்க அபாயகரமானதாகி விட்டது. பாட்டியார் என்னைத் தமது மடியில் வைத்துக் கொண்டு தமது கண்களில் கண்ணாடி போட்டுக்கொண்டு பார்த்தபடியே யிருந்தார். நான் பிறந்த நாள் முதல் என் பாட்டியின் கண்ணாடி அவர் மூக்கிலேயே இருந்து வந்தது. என் சென்னைப் பாட்டியும் கூட உட்கார்ந்திருந்தார்.

(அடுத்த ஸஞ்சிகையில் முடிவு பெறும்)

தித்திக்கும் நூதனநூல்! வி. பி. யில் விலை ரூ 1-3-0.

# கதாமோஹனரஞ்சிதம்

## ஓர் அபூர்வ கதாநூல்

சுவை ததும்பிய கதைகளும் நாவல்களும் கொண்டது.

"பிரஜாநுகூலன்" பத்திராதிபரவர்கள் நவீனமாக இயற்றியது.

### இக்கதா நூலின் விஷய அட்டவணை.

---


1 நளகீர்த்தி.
2 நான்கு சங்கீத ரஸிகர்கள்.
3 கதவு சாத்து.
4 நிவேதிதா.
5 கர்ண - துரியோதனு.
6 சிரிக்கச்செய்யும் சிங்காரம்.
7 குடித்தன ரீதி.
8 நீதிகள்.
9 ஸ்வர்ணகுமாரி.
10 மூன்று நண்பர்கள்.
11 பேரின்பம் தேவிட்டுமோ?
12 கழுதை மனிதனுவனு?
13 ஒரு சக்கரவர்த்தியும் பாலனும்.
14 குண்டூசியில் கோபுர வாழ்வு.
15 ஓர் இளைஞனின் மாதா.
16 காணமற்போன குமார்.
17 பத்மாவதியின் தடுமாற்றம்.
18 காஞேஜ் இராஜகுமாரி.
19 தொலைந்து போ!
20 ஒரு மனிதனின் சிறுமை.
21 இரு வைதீக மாதர்கள்.
22 ராமதாஸ் பந்துலு.
23 திருவாழ்த்தானின் வாக்கு.
24 ஸ்ரீமதி கனகவல்லி.
25 போடியின் பிரதாபம்.
26 மாதவன்.
27 மூன்று சாதுரியங்கள்.
28 ஹிதமே செய்வோம்.
29 பலதேசத்தார் வழக்கங்கள்.
30 ஓர் திருடனின் துறவு.
31 மாமனரின் சாமர்த்தியம்.
32 ஒரு பிரபுவின் மனைவி.
33 பலவித மனிதர்கள்.
34 ஒரு நாவிதனின் காதல்.
35 வேடிக்கை விநோதங்கள்.
36 விடுகதைகளின் விநோதங்கள்.
37 தமிழாங்கில நேசர்கள். [பவம்
38 ஸ்ரீ காசிராமேஸ்வர யாத்திராநு
39 பார்லிமெண்ட் நிர்வாகம்.
40 இங்கிலாந்தில்இந்தியன்கக்ஷியார்
41 அந்தமான் தீவினரின் அதிசயம்
42 என் கிழத்தனத்தையடைகிறீர்
43 துண்டு துணுக்குகள் [கள்
44 இலக்கணஞானம். [னங்கள்
45 ஒருஉத்தியோககனவானின் சகு
46 கார்படிகனின் வறுமை.
47 வீரவரனின் இராஜபக்தி.
48 சந்திரஸ்வாமியின் சாதுர்யம்.
49 தருணசந்திரனின் ஏமாற்றம்.
50 கனவோ! நினைவோ!
51 வீரநாட்டின் வாழ்த்து.
52 தேன்கூடு.
53 நாம் கண்ட அநுபவம்
54 ஷேக்ஸ்பியரது நடிப்பு.
55 தமிழ் மொழிபெயர்ப்பு.
56 பிதா பக்தி (கீதம்)
57 வீணுக்குப் பேசுவது.
58 உழைப்பின் நகரவாழ்க்கை.
59 குதிரை இரவல்!
60 சாமர்த்திய சிறுவர்கள் மூவர்
61 சூடாமணி.
62 இன்பதுன்ப சதிபதிகள்.
63 இருவேந்தர்களின் சமரஸம்.
64 விசாலாக்ஷியின் நாடக அவா
65 நரசிங்கராவின் நாகரீகம்.
66 ஒரு வைத்திய பண்டிதர்!
67 கணித விநோதங்கள்.
68 கைதேர்ந்த தீரன்.

எல்லாம் உலக அநுபவங்கள்! யாவும் ருசிகரமான குறிப்புகளே! வேடிக்கை விநோதங்கள், சிறுவர் சிறுமியர்க்கான விடுகதைகள், காதலர் கடிதங்கள், நாடக விசேஷங்கள், ஆசாரத்திருத்த தமாஷ்கள், நவீன ரஸி கர்களின் மனப்போக்குகள், கோணல்வழிகள், லோகரகஸியங்கள், வைத் திய பாதைகள், வீரரஸ கீதங்கள்; தமிழ்ச்சுவை நிரம்பிய கதைகள், ஆங்கி லப் போக்கையொட்டிய சிறு சிறு நாவல்கள், இன்சுவை யூட்டும் துண்டு துணுக்குகள், தமிழறிவு, ஞானம், உலகநிலை, தேசரீதி, வலிமை, வாழ்க்கை, நேச ஸல்லாபங்கள்—இன்னோரன்ன பல்வகைத்தாய சேகரங்கள் இக் 'கதாமோஹனரஞ்சித''த்துள் நிறைந்து நிற்கின்றன. பார்க்க அழகாய், சொகுஸான பைண்டாய், வாசிக்க இனிமையாய், நினைக்க மனோகரமாய் படிப்பவர்க்கே உயர்வாய் ஒளிரும்.

## 1. தமிழ்ச்சுவை.

கதா மோஹன ரஞ்சிதம்:—தமிழ்ச்சுவை பெரிதும் கொண்டது. பல வித பாஷைகள் - எழுத்தியல் - சொல்லியல் - தொடர்பியல் - புணரியல் - பதவியல்-யாப்பியல்-அணியியல்-பொருளியல்- இரட்டைக்கிளவி-தொகைக் குறிப்பு - வெள்ளை, முடுகுவாக்கியம்-சங்கேதம்-பரியாயவணி-விசேஷவணி- முதல், வழி, சார்புநூல்கள்-அலங்காரம்-செய்யுள்-தமிழ், சமஸ்கிருத பதங் கள்-அகஸ்தியர், தொல்காப்பியர் - மங்கலம் - இடக்கரடக்கல்-ஆகுபெயர்- அன்மொழித்தொகை - உண்மைக்கு மிஞ்சி வர்ணித்தல் - இன்னும் அநேக அருமையான குறிப்புகளை உதகரித்திருக்கின்றோம்.

இவைகளை வாசித்தபின்பு இலக்கணநூல்களைக் கற்கப்புகின், அதில் சுவை தோன்றி மேன்மேலும் பயில்தற்கு அவா எழதல்கூடும்.

## 2. வேடிக்கை விநோதங்கள்

கதா மோஹன ரஞ்சிதம் வேடிக்கை விநோதங்களில் வெகு விசேஷித் தது. சேவகனின் புகழ்ச்சி - ஒரு வைதீகரின் ரூபாய் - அக்காளை - எலு தாம்சொன்னே - உன் கண்ணாலம் - மொட்டை - ஒரு தையற்காரன் - பக் கத்து உளவு - லோபியின் கண்ணாடி - காதல் - பெரிய மனுஷ்யர் - ஸ்திர மான கோபம் - ஊமை - வேதாந்தம் - ஆடவர் சிந்தனை - கால்வாய் - பஞ்ச பாத்திரம் - தானேசெய்தல் - அழுகை 5 ராஜ்யம் ஜெயிக்கும் - ஒரு லாய ரின் உயில் - தூக்கு சிக்ஷையில் சுகம்-சோறளியாத புருடன்-பத்து பெரிய மனிதர்கள் - ஒரு ஹைகோர்ட் வக்கீல் - எது நல்லவேளை - ஒரு தாவா!— சப்திக்காத ரூபாய் - புதுவக்கீல் - தீய்ந்த சொட்டி - சுருட்டு வர்த்தகன் - ஒரு கடன்காரன் - தன் சொம்பு - அடியிலே பால் - ஒரே பிடிவாதமா ?— பால்காரன் மகன் - ஒரு சீனதேசத்திருடன் - தாதமய்யங்கார் - மருந்தின் கசப்பு - மறுநாள் மிதத்தல் - கறுப்புக்குல்லா - இன்னும் அநேக விநோதங் கள் இதில் அடங்கியுள்ளன.

## 3. விடுகதைகளின் விநோதம்.

கதா மோஹன ரஞ்சிதத்தில் 66 விடுகதைகளைக் காணலாம். விடு விப்புகளை மட்டும் கீழே தருகிறேம்.

1-விபூதிப்பழம், 2-குங்குமப்பூ, 3-நெருப்பு, 4-வாழையிலை, 5 - விளாங் காய், 6-புளியங்காய், 7-ஆமணக்கு, 8-குழி, 9-பலாப்பழம், 10-ஆகாசபா ணம், 11-தோப்பரை, 12-ரஸ்தா, 13-இதழும் பல்லும், 14-பேச்சு, 15-எழு த்துகள், 16-சிட்டுக்கட்டு, 17-நரைமயிர், 18-அண்ணன்,19-நாக்கு, 20-பனை மரம், 21-உள்ளிப்பூண்டு, 22-கிணறு, 23-ஊசி, 24-தேள், 25-மனுஷ்யன்,

26-ஒரேபழம், 27-கொசு, 28-திண்ணை, 29-கிழிசல், 30-தபால்கடிதம், 3I-புத்திமதி, 32-நாளைத்தினம், 33-மாதுரம், 34-வலை, 35-மூக்கு, 36-தேசபடம், 37-விரல், 38-வ்யாஜ்யம், 39-கண்ணிமை, 40-மெழுகுவத்தி, 41-கண்ணடி, 42-மூக்குச்சளி, 43-இருபத்திரண்டு, 44-தேன்கூடு, 45-கட்டில், 46-நக்ஷத்திரம், 47-பருத்திக்காய், 48-மத்தளம், 49 - கண்ணடி, 50 - ஒன்றுமில்லை, 51-தோசை, 52-கால் கண் காது கை, 53-தென்னைமரம், 54-தேங்காய், 55-நிழல், 56-மழைத்துளி, 57-யந்திரம், 58-பாய், 59 தங்கை, 60-கண் 61-மூக்குக்கண்ணடி, 62-கதிர், 63-நெற்பயிர், 64-சொக்காய், 65-பாம்பு, 66-ரூபாய், ஒவ்வொன்றும் வெகு நேர்த்தியாயிருக்கும்.

இப்புஸ்தகம் விரும்புவோர் உடனே எழுதிக்கொள்ளவும். சொற்ப காபிகளே கைவசம் உள்ளன. பிரஜாநுகூலன் ஆபீஸ், ஸ்ரீரங்கம்.

---

## ஸ்ரீ விஷ்ணுஸ்தல யாத்திராமார்க்க விவரணம்.

இதுகாறும் வெளிப்படாத நூதன நூல்.

ஒவ்வொரு க்ஷேத்திரத்துக்கும் ரயில்மார்க்கம், வண்டிப்பாதை முதலிய விவரங்கள் வெகு தெளிவாய்க் காண்பிக்கப்பட்டு உயர்ந்த பதிப்பாய் வெகு நேர்த்தியாக அச்சிடப்பட்டிருக்கின்றது. வெகு அருமையான நூல். விலை அணா 5.

பிரஜாநுகூலன் பத்திராதிபர் தயாரித்தது

(1) சப்தபுரிகள், முக்திநகர், (2) சுயமாக உண்டான ஸ்தலங்கள், (3) தேவர்கள், ரிஷிகளால், நியமிக்கப்பட்ட ஸ்தலங்கள், (4) புண்ணிய தீர்த்தங்கள், அதன் உற்பத்திஸ்தலம், அவற்றை எங்கெந்த இடத்திற் காணலாமென்பது, அதற்கு வழி, (5) மலைமேலுள்ள சன்னதிகளுக்கு வழி, (6) புராண ஸ்தலங்கள் 38 - க்கும் வழி, (7) திருப்பதிகள் 108 - க்கும் வழி விபரம், ரயில்பாதை, வண்டிப்பாதை, (8) திருப்பதிகளின்மீது மங்களாசாசனம் செய்த பாசுரங்களின் புதுவிதமான நூதன கணிதக் குறிப்பு. (9) யாத்திரைக் குறிப்புகள். இன்னும் அநேக முக்கியமான விஷயங்களும் அடங்கியது.

எஸ். ஜி. இராமாநுஜலு நாயுடு பத்திராதிபர்,
"பிரஜாநுகூலன்" ஆபீஸ், ஸ்ரீரங்கம் திருச்சிநாப்பள்ளி.

---

எல்லோரும் வாங்குங்கள்! எல்லோரும் படியுங்கள்!

வருஷ சந்தா ரூ. 2.] எல்லோரும் களிகூறுங்கள்! [வெளிநாடு ரூ. 2-8-0

வெகு மக்கியம்! வெகு சிலாக்யம்!

# பிரஜாநுகூலன்.

நாவல்களுடன் கூடிய ஒரு சிறந்த செந்தமிழ் மாதாந்தரப் பத்திரிகை.

1. "பிரஜாநுகூலன்" பத்திரிகை 40 பக்கங்களுடனும் 1904-ம் வருட முதற்கொண்டு எங்களால் வெகு அழகாயும் ஒழுங்காயும் புத்தகரூபமாய் நடைபெற்று வருகின்றது. உலகத்திலே பலவித போதனைகளில் அநுபவ

பூர்வமாய்ப் பிரதி விஷயங்களையும் எடுத்துப் பேசுதல் பொதுவாக எவருக்கும் அதிக கஷ்டசாத்தியம். இப்படி அநுபவங்களை எடுத்து விவரிப்பதில் அவைகளைப் புதுச்சுவை நிரம்பிய சிறு சிறு கதைகளினூடே கலந்து அவ்வழியாகப் போதகஞ்செய்தல் பாராட்டத் தக்கதாகும். பிரஜாநுகூலன் பத்திரிகையை நடத்திவரும் நம்முடைய கருத்தும் இதுவே.

2. "பிரஜாநுகூலன்" பத்திரிகை கதைகளுக்கும் நாவல்களுக்கும் மிகவும் பெயர்பெற்றது. கதைகளைப் படித்து அதன்மூலமாகப் புத்தக வாசிப்பிலே ஒருவித ருசி தோன்றி, அப்படியே பலவிதமான நூல்களையும் வாசிக்க விருப்பமுண்டாகி, உயரிய கிரந்தங்களிலும் பார்வை பிரவேசித்து பழக்கம் மிகுதியாகித் தேர்ச்சி எய்தினோர் வெகுபேர். ஆயிரம் பக்கங்களாக விருந்தபோதிலும் சலியாது படிக்க விருப்பம் விளைப்பது கதைகளும் நாவல்களுந்தான். பிரஜாநுகூலனில் பிரதிமாதமும் புதிய கதையொன்று காணலாம்.

3. "பிரஜாநுகூலன்" பத்திரிகை பிரபஞ்சத்தின் அநுபவ விநோதங்களை வெகு நன்றாய் எடுத்துக் காட்டுகிறதென்று எல்லோரும் புகழ்கின்றார்கள். சிறுவர் சிறுமியர்கள் அனைவரும் தமது உள்ளத்தில் மறைந்துநிற்கும் ரகசியங்களெல்லாம் இதிற் காணப்படுகின்றனவேயென்று வெகுவாக வியந்து நேசிக்கின்றனர். உலகத்தில் பிரதியொரு மனிதனிடத்திலும் நிகழப்படாநின்ற அனுபவவிஷயங்களைத் திரட்டிக் கதாரூபமாகக் கொடுப்பதே இப்பத்திரிகையின் நோக்கம் ஏனென்றால் அநுபவத்திற்கு மிஞ்சின ஞானமும், அதனினும் மேம்பாடான படிப்பினையும் வேறேதுமில்லை. அநுபவமே குரு, அநுபவமே அரசன், அநுபவமே சாஸ்த்ரம், அநுபவமே சாக்ஷி, அநுபவமே உத்தம சிநேகிதனுயுமிருக்கிறது.

4. "பிரஜாநுகூலன்" பத்திரிகை உலக நன்மையைக்கருதி வெளியிடப்படுகிறது. அரிய பல நூலாராய்ச்சியாலும், அனுபவ உலகவியல்பாலும், அறிவுடையோர் தெரிவித்த கேள்வியளவாலும், கற்று, உணர்ந்து, அடைந்து கேட்ட பயனெல்லாம் இப்பத்திரிகையில் எல்லோரும் கற்று உணர்ந்து அடையலாம். எந்த சாதிக்கும் எந்த சமயத்திற்கும் எந்த நூலிற்கும் இதன் கருத்து ஒத்திருக்கும். பாலர்கட்கும் இது பயன்தரும். குமரர்கட்கு மிது நலங்கொடுக்கும். விருத்தர்கட்கு மிது மேலாம்பயனே. வெறுங்கதையன்று. வீண்வளர்ப்பன்று. காசு பறிப்பதற்கன்று, கௌரவங் கருதியன்று. அதன் பெருமை பார்த்தால் தெரியும், படித்தால் அறியலாம்.

5. "பிரஜாநுகூலன்" பத்திரிகை காகிதத்தாலும் எழுத்தாலும் வேலையழகாலும், விஷய அருமையாலும், நடையின் இனிமையாலும், நாகரீக மிகுதியாலும் உயர்ந்து விளங்குகிறது. ஆழ்ந்த கருத்தமைந்து இனியசொற்களால் எளிய நடையோடு எல்லோருக்கும் பயனளிக்குமாறு சந்தமினிய சுந்தரத் தமிழில் எழுதப்பட்டுத் தேனினுஞ் சுவைத்துப் பாலினும் வெளுத்துப் பொருளினும் மிகுத்து அலங்காரம்செய்து அறிவை விளக்கி ஆநந்தங் கொடுப்பதாயிருக்கின்றது,

6. "பிரஜாநுகூலன்" பத்திரிகை 14-வருஷங்களாக நடைபெற்று பெருந்தன்மை வாய்ந்து தமிழ்நாடெங்கணும் பரவியுள்ளதென்பதை யாவருமறிவார். இதைப் பூர்ணமாய்ப் படித்து, தாங்கள் உடனே இப்பத்திரிகைக்கு சந்தாதாரராகவேண்டுமென்பது எங்களுடைய கோரிக்கை. உடனே ஆர்டர் செய்யுங்கள்.

☞ மானேஜர், பிரஜாநுகூலன் ஆபீஸ், ஸ்ரீரங்கம், திருச்சி.